கருநாடக அரசு

# செம்மொழித் தமிழ்

# CHEMMOZHI THAMIZH

## முதல் மொழி

பாகம் - 1

**FIRST LANGUAGE TAMIL**

# 5

ஆம் வகுப்பு

**STANDARD**

NOT TO BE REPUBLISHED @KTBS

**Karnataka Text Book Society (R.)**
6th Cross, Malleshwaram
Bangalore - 560 003.

# Preface

The Textbook Society, Karnataka has been engaged in producing new textbooks according to the new syllabi which in turn are designed on NCF – 2005 since June 2010. Textbooks are prepared in 12 languages; seven of them serve as the media of instruction. From standard 1 to 4 there is the EVS, mathematics and $5^{th}$ to $10^{th}$ there are three core subjects namely mathematics, science and social science.

**NCF – 2005 has a number of special features and they are:**

- connecting knowledge to life activities
- learning to shift from rote methods
- enriching the curriculum beyond textbooks
- learning experiences for the construction of knowledge
- making examinations flexible and integrating them with classroom experiences
- caring concerns within the democratic policy of the country
- making education relevant to the present and future needs.
- softening the subject boundaries- integrated knowledge and the joy of learning.
- the child is the constructor of knowledge

The new books are produced based on three fundamental approaches namely.

Constructive approach, Spiral Approach and Integrated approach. The learner is encouraged to think, engage in activities, master skills and competencies. The materials presented in these books are integrated with values. The new books are not examination oriented in their nature. On the other hand they help the learner in the all round development of his/her personality, thus help him/her become a healthy member of a healthy society and a productive citizen of this great country, India.

The most important objectives of teaching language are listening, speaking, reading, writing and reference work. These skills have been given a lot of importance in all the language textbooks. Along with the inculcation of these skills, fundamental grammar, opportunities for learners to appreciate beauty and imbibe universal life values have been integrated in language textbooks. When learners master these competencies, they would stop studying textbooks for the sake of passing examinations. In order to help learners master these competencies, a number of paired and group activities, assignments and project work have been included in the textbooks. It is expected that these activities would help learner master communicative skills. Ultimately, it is expected that students master the art of learning to learn and make use of these competencies in real life.

The Textbook Society expresses grateful thanks to the chairpersons, writers, scrutinisers, artists, staff of DIETs and CTEs and the members of the Editorial Board and printers in helping the Text Book Society in producing these textbooks. A few works of some writers and poets have been included in these textbooks. The textbook society is extremely grateful to them for giving their consent for the inclusion of these pieces in the textbooks.

**Nagendra Kumar**
Managing Director
Karnataka Textbook Society®
Bengaluru, Karnataka

**G S Mudambadithaya**
Coordinator
Curriculum Revision and
Textbook Preparation
Karnataka Textbook Society®
Bengaluru, Karnataka

© KTBS
NOT TO BE REPUBLISHED

# முன்னுரை

ஒருவர் தம் எண்ணங்களையும், கருத்துக்களையும் வெளிப்படுத்த மொழி மிகவும் இன்றியமையாதது குழந்தை முதன் முதலில் தாயின் வழியாகவும் பின்னர் சமூகத்தின் வழியாகவும் மொழி அறிவைப்பெற்று, மொழியை உயிர்ப்போடு வெளியிடத் தொடங்குகிறது. மொழி ஒரு வலுவான ஊடகமாகும்.

தற்போதைய பாடத் திட்டம் அமைக்கும் பொழுது மாநிலப் பாடத்திட்டங்கள் 2001-02 மற்றும் என்.சி.எப் 2005 ஆகிய இவ்விரண்டையும் ஒப்பிட்டுப் பாடத்திட்டம் மேன்மைப் படுத்தப் பட்டுள்ளது. அடிப்படையில் குறைந்த கற்றல் அளவுடன் கூடிய திறன்கள் என்.சி.எப். 2005 ன் பாடத்திட்டத்தினை ஒப்பிட்டு உள்ளுரை செம்மைப் படுத்தப்பட்டுள்ளது.

பாடத்திட்டம் குழந்தைகளின் திறன்களான, கேட்டல், பேசுதல், படித்தல் மற்றும் எழுதுதல் ஆகியவற்றின் அடிப்படையில் செயல்திறன் மற்றும் தொடர்புப்பணி போன்றவற்றை உள்ளடக்கி இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. தேசியக் கல்வித்திட்டம் 1986 இல் குறிப்பிட்டுள்ளபடி குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்குத் தேவையான கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது.

இந்நூலில் மொழிப்பாடத்திற்கு ஏற்பத் தனிச் சிறப்பாக பல திறன்கள் உள்ளடங்கி உள்ளன. மாறுபட்ட கோணத்தில் எழுதப்பட்ட கட்டுரைகள், பாடங்கள், பாடல்கள், வரலாறு நிகழ்வுகள் போன்றன, குழந்தைகளின் கற்பனைத் திறனை வளர்க்கும். பயிற்சிப் பகுதி பல சிறப்பினைக் கொண்டு மாணவர்களிடையே படிக்கும் திறனையும் எழுதும் திறனையும் செம்மைப் படுத்தும்.

கற்றல் சுவையாக இருந்தால் தான் கல்வியும் சுவையாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, ''கற்றல் குழந்தைக்குச் சுவையாகத் தோன்றும் வண்ணம்'' இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

பாட நூலை உயரிய நோக்கத்தில் உருவாக்கி இருப்பினும் அதனை வகுப்பறையில் செயல்படுத்திக் கற்பிப்போர் ஆசிரியப் பெருமக்களே. இந்நூல் உருவாக்கப் பட்டதன் நோக்கத்தையும், எதிர்பார்ப்பையும் நன்குணர்ந்து செயலாற்றுவார்கள். என்று நம்புகிறோம். வருங்காலத் தலைமுறையை உருவாக்கும் ஆசிரியப் பெருமக்களின் ஒத்துழைப்பும், கற்பிக்கும் திறனும் எங்கள் பணி வெற்றி பெற மிக மிக முதன்மையானவை என நம்புகிறோம். இந்நூல் சிறப்பாக அமைந்திட தங்களின் நூல் நிலையத்தைப் பயன்படுத்திக்கொள்ள உதவிய பெங்களூர் தமிழ்ச் சங்கத்தினருக்கும் மேலும் இந்நூல் நன்கு அமைந்திட, செப்பனிட்டு முறைப்படுத்திய பேராசிரியர் முனைவர் சங்கரி அவர்களுக்கும் தேவையான உதவிகள் பல செய்த கருநாட பாடநூல் நிறுவனத்திற்கும் பாடப்புத்தகக் குழுவின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

**ஆக்கியோர்**

© KTBS NOT TO BE REPUBLISHED

# Text Book Committee

***Chairpersons :***

1) **Pro. D Krishna Murthy**, Professor, No. 337, 14th Main, RMV. Extention, Sadashivanagar, Bengaluru.

***Members :***

1) **L. Ragupathy**, Rtd. H.M, No. 02, Vasanthnagar, Kusugal Road, Hubballi
2) **V. Sarala**, Teacher, BBMP Girls Junior College, Jogupalya, Bengaluru - 8.
3) **Bhagyalakshmi .K,** A.M, Govt. Higher Primary School, Jayabharath nagar, M.S. Nagar, Bengaluru.
4) **G. Jyothi,** A.M, Govt. Tamil Higher Primary School, Pudupuracheri, Shanthinagar, Bengaluru.
5) **D.V. Ravikumar,** Drawing teacher, Govt. High School, Bagalur, North-4, Bengaluru.

***Scrutinizers :***

1) **Dr. A. Shankari,** Tamil Professor, No. 3668, 8th Cross, 13th 'D' Main, HAL 2nd Stage, Indiranagar, Bengaluru.

***Chief Co-ordinator :***

**Prof . G.S. Mudambadithaya,** Co-ordinator, Curriculum revision and text book preparation, KTBS, Bengaluru.

***Chief Advisers :***

**Sri Nagendra Kumar,** Managing Director, KTBS, Bengaluru.

**Sri Panduranga,** Deputy Director, (Incharge) KTBS, Bengaluru.

***Programme Co-ordinator :***

**Smt. Chandrakala,** ADPI, KTBS, Bengaluru.

@KTBS NOT TO BE REPUBLISHED

# ಪರಿಷ್ಕರಣೆ ಕುರಿತು

ಒಂದರಿಂದ ಹತ್ತನೇ ತರಗತಿಯ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಬಗ್ಗೆ ಪ್ರಕಟಗೊಂಡ ಸಾರ್ವಜನಿಕ ಅಭಿಪ್ರಾಯಗಳನ್ನು ಗಮನಿಸಿ ಮಾನ್ಯ ಮುಖ್ಯಮಂತ್ರಿಯವರೂ ಅರ್ಥಸಚಿವರೂ ಆಗಿರುವ ಶ್ರೀ ಸಿದ್ದರಾಮಯ್ಯನವರು ತಮ್ಮ 2014–15 ರ ಬಜೆಟ್‌ನಲ್ಲಿ ತಜ್ಞರ ಸಮಿತಿಯನ್ನು ರಚಿಸುವ ಘೋಷಣೆ ಮಾಡಿದರು. ತಜ್ಞರು ಅನುಸರಿಸಬೇಕಾದ ಮೂಲ ಆಶಯವನ್ನು ಹೀಗೆ ಹೇಳಿದರು: "ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಸಾಮಾಜಿಕ ಸಾಮರಸ್ಯ, ನೈತಿಕಮೌಲ್ಯಗಳು, ವ್ಯಕ್ತಿತ್ವವಿಕಸನ, ವೈಜ್ಞಾನಿಕ ಮತ್ತು ವೈಚಾರಿಕ ಮನೋಭಾವ, ಜಾತ್ಯತೀತತೆ ಮತ್ತು ರಾಷ್ಟ್ರಿಯ ಬದ್ಧತೆಗಳಿಗೆ ಅನುವಾಗುವಂತೆ ತಜ್ಞರ ಸಮಿತಿಯನ್ನು ಪುನರ್ ರಚಿಸಲಾಗುವುದು" – ಇದು ಬಜೆಟ್ ಭಾಷಣದಲ್ಲಿ ಸಾದರಪಡಿಸಿದ ಆಶಯ.

ಆನಂತರ ಶಿಕ್ಷಣ ಇಲಾಖೆಯು ಒಂದರಿಂದ ಹತ್ತನೇ ತರಗತಿಯವರೆಗಿನ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಪರಿಷ್ಕರಣೆಗಾಗಿ 27 ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಿ ದಿನಾಂಕ: 24.11.2014 ರಂದು ಆದೇಶಹೊರಡಿಸಿತು. ಈ ಸಮಿತಿಗಳು ವಿಷಯವಾರು ಮತ್ತು ತರಗತಿವಾರು ಮಾನದಂಡಕ್ಕನುಗುಣವಾಗಿ ರಚಿತವಾದವು. ವಿವಿಧ ಪಠ್ಯವಿಷಯಗಳಿಗೆ ಸಂಬಂಧಿಸಿದ ತಜ್ಞರು, ಅಧ್ಯಾಪಕರು ಈ ಸಮಿತಿಗಳಲ್ಲಿದ್ದಾರೆ. ಈಗಾಗಲೇ ಲಿಖಿತವಾಗಿ ಬಂದಿರುವ ಅನೇಕ ಆಕ್ಷೇಪಗಳು ಮತ್ತು ವಿಶ್ಲೇಷಣೆಗಳನ್ನು ಪರಿಶೀಲಿಸಿ, ತಪ್ಪು ಒಪ್ಪುಗಳ ಬಗ್ಗೆ ನಿರ್ಣಯಿಸಿ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಷ್ಕರಿಸುವ ಹೊಣೆಹೊತ್ತ ಈ ಸಮಿತಿಗಳಿಗೆ 'ಅಗತ್ಯವಿದ್ದಲ್ಲಿ ಪಠ್ಯವಸ್ತುವನ್ನು ಪರಿಷ್ಕರಿಸಿ ನಂತರ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಷ್ಕರಿಸುವ' ಸ್ವಾತಂತ್ರ್ಯವನ್ನು 24.11.2014ರ ಆದೇಶದಲ್ಲೇ ನೀಡಲಾಗಿತ್ತು. ಆನಂತರ 19.09.2015 ರಂದು ಹೊಸ ಆದೇಶ ಹೊರಡಿಸಿ 'ಅಗತ್ಯವಿದ್ದಲ್ಲಿ ಪುನರ್ ರಚಿಸುವ' ಸ್ವಾತಂತ್ರ್ಯವನ್ನು ನೀಡಲಾಯಿತು. ಹೀಗೆ ಸಮಗ್ರ ಪರಿಷ್ಕರಣೆಗೊಂಡ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು 2016–17 ರ ಬದಲು 2017–18ನೇ ಶೈಕ್ಷಣಿಕ ವರ್ಷದಲ್ಲಿ ಜಾರಿಗೊಳಿಸಲಾಗುವುದೆಂದು ಇದೇ ಆದೇಶದಲ್ಲಿ ತಿಳಿಸಲಾಯಿತು.

ಅನೇಕ ವ್ಯಕ್ತಿಗಳೂ ಸಂಘಟನೆಗಳೂ ಸ್ವಯಂಪ್ರೇರಿತರಾಗಿ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಮಾಹಿತಿದೋಷ, ಆಶಯದೋಷಗಳನ್ನು ಪಟ್ಟಿಮಾಡಿ ಶಿಕ್ಷಣ ಸಚಿವರಿಗೆ, ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘಕ್ಕೆ ಕಳುಹಿಸಿದ್ದರು. ಅವುಗಳ ಪರಿಶೀಲನೆಮಾಡಿದ್ದಲ್ಲದೆ, ಸಮಿತಿಗಳಾಚೆಗೆ ಅನೇಕ ಸಂವಾದಗಳನ್ನು ಏರ್ಪಡಿಸಿ ವಿಚಾರ ವಿನಿಮಯ ಮಾಡಿಕೊಂಡಿದ್ದೇವೆ. ಪ್ರಾಥಮಿಕ ಮತ್ತು ಪ್ರೌಢಶಾಲಾ ಅಧ್ಯಾಪಕರ ಸಂಘಗಳ ಜೊತೆ ಚರ್ಚಿಸಿದ್ದಲ್ಲದೆ ಪ್ರಶ್ನಾವಳಿ ಸಿದ್ಧಪಡಿಸಿ ಅಧ್ಯಾಪಕರಿಗೆ ಕಳಿಸಿ ಅಭಿಪ್ರಾಯಗಳನ್ನು ಸಂಗ್ರಹಿಸಲಾಗಿದೆ. ಅಧ್ಯಾಪಕರು, ವಿಷಯಪರಿವೀಕ್ಷಕರು ಮತ್ತು ಡಯಟ್ ಪ್ರಾಂಶುಪಾಲರ ಪ್ರತ್ಯೇಕ ಸಭೆಗಳನ್ನು ನಡೆಸಿ ವಿಶ್ಲೇಷಣಾತ್ಮಕ ಅಭಿಮತಗಳನ್ನು ಪಡೆಯಲಾಗಿದೆ. ವಿಜ್ಞಾನ, ಸಮಾಜವಿಜ್ಞಾನ, ಗಣಿತ, ಭಾಷೆ ಸಾಹಿತ್ಯಗಳಿಗೆ ಸಂಬಂಧಿಸಿದ ತಜ್ಞರಿಗೆ ಮೊದಲೇ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಕಳುಹಿಸಿ ಆನಂತರ ಸಭೆ ನಡೆಸಿ ಚರ್ಚಿಸಲಾಗಿದೆ. ಮಹಿಳಾ ಸಂಘಟನೆ ಹಾಗೂ ವಿಜ್ಞಾನ ಸಂಬಂಧಿ ಸಂಸ್ಥೆಗಳನ್ನು ಆಹ್ವಾನಿಸಿ ಚಿಂತನೆ ನಡೆಸಲಾಗಿದೆ. ಹೀಗೆ ಎಲ್ಲಾ ಮೂಲಗಳಿಂದ ಪಡೆದ ಅರಿವಿನ ಆಧಾರದ ಮೇಲೆ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಅಗತ್ಯವಿದ್ದಕಡೆ ಪರಿಷ್ಕರಿಸಲಾಗಿದೆ.

© KTBS NOT TO BE REPUBLISHED

ಬಹುಮುಖ್ಯವಾದ ಇನ್ನೊಂದು ಸಂಗತಿಯನ್ನು ಇಲ್ಲಿ ಹೇಳಬೇಕು. ಕೇಂದ್ರೀಯ ಶಾಲಾ (N.C.E.R.T) ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಜೊತೆ ರಾಜ್ಯದ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ತೌಲನಿಕವಾಗಿ ಅಧ್ಯಯನ ಮಾಡಿ ಸಲಹೆಗಳನ್ನು ನೀಡಲು ವಿಜ್ಞಾನ, ಗಣಿತ ಮತ್ತು ಸಮಾಜವಿಜ್ಞಾನಕ್ಕೆ ಸಂಬಂಧಿಸಿದಂತೆ ತಜ್ಞರ ಮೂರು ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಲಾಯಿತು. ಈ ಸಮಿತಿಗಳು ನೀಡಿದ ತೌಲನಿಕ ವಿಶ್ಲೇಷಣೆ ಮತ್ತು ಸಲಹೆಗಳನ್ನು ಆಧರಿಸಿ ರಾಜ್ಯ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಗುಣಮಟ್ಟವನ್ನು ಹೆಚ್ಚಿಸಲಾಗಿದೆ. ಕೇಂದ್ರೀಯ ಶಾಲಾ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳಿಗಿಂತ ನಮ್ಮ ರಾಜ್ಯದ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಗುಣಮಟ್ಟ ಕಡಿಮೆಯಾಗದಂತೆ ಕಾಯ್ದುಕೊಳ್ಳಲಾಗಿದೆ. ಜೊತೆಗೆ ಆಂಧ್ರ, ತಮಿಳುನಾಡು, ಮಹಾರಾಷ್ಟ್ರಗಳ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಜೊತೆ ನಮ್ಮ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಶೀಲಿಸಲಾಗಿದೆ.

ಇನ್ನೊಂದು ಸ್ಪಷ್ಟನೆಯನ್ನು ನೀಡಲು ಬಯಸುತ್ತೇನೆ. ನಮ್ಮ ಸಮಿತಿಗಳು ಮಾಡಿರುವುದು ಪರಿಷ್ಕರಣೆಯೇ ಹೊರತು ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಸಮಗ್ರ ರಚನೆಯಲ್ಲ. ಆದ್ದರಿಂದ ಈಗಾಗಲೇ ರಚಿತವಾಗಿರುವ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಸ್ವರೂಪಕ್ಕೆ ಎಲ್ಲಿಯೂ ಧಕ್ಕೆಯುಂಟುಮಾಡಿಲ್ಲ. ಲಿಂಗತ್ವ ಸಮಾನತೆ, ಪ್ರಾದೇಶಿಕ ಪ್ರಾತಿನಿಧ್ಯ, ರಾಷ್ಟ್ರೀಯ ಸಮಗ್ರತೆ, ಸಮಾನತೆ, ಸಾಮಾಜಿಕ ಸಾಮರಸ್ಯಗಳ ಹಿನ್ನೆಲೆಯಲ್ಲಿ ಕೆಲವು ಪರಿಷ್ಕರಣೆಗಳು ನಡೆದಿವೆ. ಹೀಗೆ ಪರಿಷ್ಕರಿಸುವಾಗ ರಾಷ್ಟ್ರೀಯ ಪಠ್ಯಕ್ರಮ ಚೌಕಟ್ಟು ಮತ್ತು ರಾಜ್ಯ ಪಠ್ಯಕ್ರಮ ಚೌಕಟ್ಟುಗಳನ್ನು ಮೀರಿಲ್ಲವೆಂದು ತಿಳಿಸಬಯಸುತ್ತೇನೆ: ಜೊತೆಗೆ ನಮ್ಮ ಸಂವಿಧಾನದ ಆಶಯಗಳನ್ನು ಅನುಸರಿಸಲಾಗಿದೆ. ಸಮಿತಿಗಳು ಮಾಡಿದ ಪರಿಷ್ಕರಣೆಯನ್ನು ಮತ್ತೊಮ್ಮೆ ಪರಿಶೀಲಿಸಲು ವಿಷಯವಾರು ಉನ್ನತ ಪರಿಶೀಲನ ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಿ ಅಭಿಪ್ರಾಯಪಡೆದು ಅಳವಡಿಸಲಾಗಿದೆ.

ಹೀಗೆ ಕ್ರಮಬದ್ಧವಾಗಿ ನಡೆದ ಕೆಲಸಕ್ಕೆ ತಮ್ಮನ್ನು ತಾವು ಸಂಪೂರ್ಣ ತೊಡಗಿಸಿಕೊಂಡ 27 ಸಮಿತಿಗಳ ಅಧ್ಯಕ್ಷರು ಮತ್ತು ಸದಸ್ಯರನ್ನು ಹಾಗೂ ಉನ್ನತ ಪರಿಶೀಲನಾ ಸಮಿತಿಯ ಸಮಸ್ತರನ್ನು ಕೃತಜ್ಞತೆಯಿಂದ ನೆನೆಯುತ್ತೇವೆ. ಅಂತೆಯೇ ಸಮಿತಿಗಳ ಕೆಲಸ ಸುಗಮವಾಗಿ ನಡೆಯುವಂತೆ ವ್ಯವಸ್ಥೆಮಾಡಲು ಕಾರ್ಯಕ್ರಮ ಅಧಿಕಾರಿಗಳಾಗಿ ನಿಷ್ಠೆಯಿಂದ ದುಡಿದ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘದ ಎಲ್ಲಾ ಅಧಿಕಾರಿಗಳನ್ನೂ ನೆನೆಯುತ್ತೇವೆ. ಸಹಕರಿಸಿದ ಸಿಬ್ಬಂದಿಗೂ ನಮ್ಮ ವಂದನೆಗಳು. ಅಭಿಪ್ರಾಯ ನೀಡಿ ಸಹಕರಿಸಿದ ಸರ್ವ ಸಂಘಟನೆಗಳು ಮತ್ತು ತಜ್ಞರಿಗೆ ಧನ್ಯವಾದಗಳು.

NOT TO BE REPUBLISHED @KTBS

**ಎಂ. ಪಿ. ಮಾದೇಗೌಡ**
ವ್ಯವಸ್ಥಾಪಕ ನಿರ್ದೇಶಕರು
ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ)
ಬೆಂಗಳೂರು

**(ಪ್ರೊ. ಬರಗೂರು ರಾಮಚಂದ್ರಪ್ಪ)**
ಸರ್ವಾಧ್ಯಕ್ಷರು
ಪಠ್ಯಪುಸ್ತಕ ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿ
ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ)
ಬೆಂಗಳೂರು

## ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿಗಳ ವಿವರ

**ಸರ್ವಾಧ್ಯಕ್ಷರು**

**ಪ್ರೊ. ಬರಗೂರು ರಾಮಚಂದ್ರಪ್ಪ** ರಾಜ್ಯ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಮಿತಿ, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ) ಬೆಂಗಳೂರು–85

## ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿ

**ಅಧ್ಯಕ್ಷರು**

**ಡಾ. ಸುಧಾಕರ,** ನಿವೃತ್ತ ತಮಿಳು ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, ಪ್ರಥಮದರ್ಜೆ ಕಾಲೇಜು, ಉರಿಗಾಂ, ಕೆ.ಜಿ.ಎಫ್.

**ಸದಸ್ಯರು**

**ಶ್ರೀ. ಆಶೀರ್ವಾದಂ,** ಸ. ಶಿ, ಬೆಂಗಳೂರು ತಮಿಳು ಸಂಘಂ ಕಾಮರಾಜರ ಪ್ರೌಢಶಾಲೆ, ಬೆಂಗಳೂರು.

**ಶ್ರೀ. ಬಾಬು,** SVCK ಪ್ರೌಢಶಾಲೆ, 2ನೇ ಮುಖ್ಯರಸ್ತೆ, ತ್ಯಾಗರಾಜ ನಗರ, ಬೆಂಗಳೂರು.

**ಶ್ರೀಮತಿ. ಅಮುದ,** ಉಪನ್ಯಾಸಕರು, ಜಿ.ಸಿ.ಸಿ.ಡಬ್ಲ್ಯು ಕಾಲೇಜು, ಫ್ರೇಜರ್‌ಟೌನ್, ಶಿವಾಜಿನಗರ, ಬೆಂಗಳೂರು.

**ಶ್ರೀಮತಿ. ಕಾತ್ಯಾಯಿನಿ,** ಸಹ ಶಿಕ್ಷಕರು, ಆಲ್ಫೋನ್ಸ್ ಹೈಸ್ಕೂಲ್, ಡೇವಿಸ್‌ರೋಡ್, ಥಾಮಸ್‌ಟೌನ್, ಬೆಂಗಳೂರು.

## ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಉನ್ನತ ಸಮಿತಿ ತಜ್ಞರುಗಳು

**ಡಾ. ಕಾರ್ಲಾಸ್,** ನಿವೃತ್ತ ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, 253, 1ನೇ ಅಡ್ಡರಸ್ತೆ, 2ನೇ ಬ್ಲಾಕ್, ಬನಶಂಕರಿ 3ನೇ ಹಂತ (ಕತ್ರಿಗುಪ್ಪೆ), ಜನತಾಬಜಾರ್, ಬೆಂಗಳೂರು.

**ಡಾ. ಲಿಂಡಾಕ್ರಿಸ್ಟ್,** ನಿವೃತ್ತ ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, 253, 1ನೇ ಅಡ್ಡರಸ್ತೆ, 2ನೇ ಬ್ಲಾಕ್, ಬನಶಂಕರಿ 3ನೇ ಹಂತ (ಕತ್ರಿಗುಪ್ಪೆ), ಜನತಾಬಜಾರ್, ಬೆಂಗಳೂರು.

**ಪ್ರೊ.** ಸೀತಾ, ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, ಸೆಂಟ್ ಫಿಲೋಮಿನಾ ಕಾಲೇಜು, ಬನ್ನಿಮಂಟಪ, ಮೈಸೂರು–ಬೆಂಗಳೂರು ರಸ್ತೆ, ಮೈಸೂರು.

**ಸಲಹೆ ಮತ್ತು ಮಾರ್ಗದರ್ಶನ:**

**ಶ್ರೀ ಎಂ. ಪಿ. ಮಾದೇಗೌಡ,** ವ್ಯವಸ್ಥಾಪಕ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ಬೆಂಗಳೂರು.

**ಶ್ರೀಮತಿ ಎಂ. ಡಿ. ಉಷಾ,** ಉಪ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ಬೆಂಗಳೂರು.

**ಕಾರ್ಯಕ್ರಮ ಸಂಯೋಜಕರು :**

**ಶ್ರೀ ಶಂಕರೇ ಗೌಡ ಎಲ್.** ಸಹಾಯಕ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ಬೆಂಗಳೂರು.

NOT TO BE REPUBLISHED ©KTBS

# பொருளடக்கம்

Q7N1F3


| வ. எண் | பாடத்தின் பெயர் | பக்க எண் |
|---|---|---|
| 1. | கடவுள் வாழ்த்து - பராபரக் கண்ணி | 1 |
| 2. | காவிரித்தாய் (காவிரி தன் வரலாறு கூறுதல்) | 4 |
| 3. | அறவுரை - திருக்குறள் | 15 |
| 4. | அன்னை அமைத்த ஆலயங்கள் | 21 |
| 5. | நல்வழி | 32 |
| 6. | புலவரும் கஞ்சனும் | 35 |
| 7. | பல்சுவை இயற்கை விருந்து | 44 |
| 8. | கித்தூர் ராணி சென்னம்மா | 46 |
| 9. | சிற்றிலக்கியம் - காந்தி பிள்ளைத்தமிழ் | 55 |
| 10. | சுற்றுலா (கடிதம் வரைதல்) | 58 |
| 11. | ஆசாரக் கோவை | 70 |
| | மனப்பாடப்பகுதி | |
| 1. | கடவுள் வாழ்த்து 8 வரிகள் | |
| 2. | திருக்குறள் 12 வரிகள்<br>இனியவை கூறல், கல்வி<br>பண்புடைமை | |
| 3. | நல்வழி 8 வரிகள் | |
| 4. | ஆசாரக் கோவை (ஆசிரியரிடம் நடந்து கொள்ளும் முறைமை) 4 வரிகள் | |


@KTBS NOT TO BE REPUBLISHED

# 1. கடவுள் வாழ்த்து

T6T8L2

## பராபரக் கண்ணி

1. சிந்தித்த எல்லாம் என் சிந்தைஅறிந்தே உதவ
   வந்த கருணை மழையே ! பராபரமே !
2. கன்றினுக்குச் சேதா கனிந்துஇரங்கல் போல்எனக்கு
   என்றுஇரங்கு வாய் கருணை எந்தாய், பராபரமே !
3. வித்தின்றி யாதும் விளைவதுண்டோ ? நின் அருளாம்
   சித்தன்றி யாங்களுண்டோ ? செப்பாய், பராபரமே !
4. நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம், அன்பே
   மஞ்சனநீர், பூசைகொள்ள வாராய், பராபரமே !

- தாயுமானவர்.

©KTBS NOT TO BE REPUBLISHED

'கடவுள் வாழ்த்து' என்பது நம்மையெல்லாம் படைத்த இறைவனுக்கு நன்றிசெலுத்தி வாழ்த்திப் பாடுதல் ஆகும்.

**ஆசிரியர் குறிப்பு :**

இதனைப் பாடியவர் தாயுமானவர். இவர் சோழ நாட்டில் திருமறைக்காடு (வேதாரண்யம்) என்னும் ஊரில் பிறந்தார். தந்தை கேடிலியப்பப் பிள்ளை, தாய் கெஜவல்லி அம்மாள். சைவ வேளாளர் மரபு. காலம் 18 ஆம் நூற்றாண்டு. திருச்சிராப் பள்ளி மலைமீது கோயில் கொண்டுள்ள இறைவனான தாயுமானவர் அருளால் பிறந்தமையால், அவ்விறைவன் பெயரை இவருக்குப் பெற்றோர் இட்டனர். மௌனகுரு என்னும் ஞானியிடம் மெய்ப்பொருள் உணர்ந்து துறவு பூண்டார். இவர் பாடிய பாடல்கள் 'தாயுமானவர் பாடல்கள்' என்று அழைக்கப்படுகின்றன.

நூற்குறிப்பு :

பராபரம் : எப்பொருட்கும் மேலான பொருள். உலகத் துயிர்களுக் கெல்லாம் மேலான பொருளாக இறைவன் விளங்குவதால், இறைவனைப் பராபரமே என விளித்துப் பாடப்பட்டுள்ளது. 'கண்ணி' என்பது இரண்டு அடிகளால் அமையப்பெற்ற செய்யுள். ஒவ்வொரு கண்ணியும் பராபரமே என்னும் விளியுடன் அமைந்துள்ளதால் இப்பாடல் 'பராபரக் கண்ணி' என வழங்கப்படுகிறது.

கருத்துரை : நான் எண்ணிய எல்லாவற்றையும் அறிந்து என் மனத்துக்கு இசைந்தவண்ணம் எனக்குத் தந்து உதவ வந்த கருணையோடு கூடிய மழை போன்றவனே ! மேலான பொருளே !

தான் ஈன்ற கன்றுக்கு தாய்ப்பசு பாசத்தோடு பால் கொடுத்துக் காப்பதுபோல, நீ எனக்கு என்று இரக்கம் காட்டுவாய் ? என் தந்தைபோன்றவனே ! பராபரமே !

விதைக்காமல் எதுவும் விளையுமோ ? (விளையாது) அதுபோல உன்னுடைய அருளாகிய மெய்ப்பொருள் இல்லாமல் நாங்கள் வாழ முடியுமோ ? கூறுவாய், பராபரமே!

என்னுடைய மனத்தையே கோயிலாகவும் உன் நினைவையே நறுமணமாகவும் உன்பால் யான்கொண்ட அன்பையே முழுக்காட்டும் நன்னீராகவும் கொண்டு, நான் உனக்குச் செய்யும் வழிபாட்டினை ஏற்றுக்கொள்ள நீ விரும்பி வருவாயாக, பராபரமே !

அருஞ்சொற்பொருள் :

1. சிந்தித்த - எண்ணிய ; கருணைமழை-அருள் என்னும் மழை ; பராபரம்-மேலான பொருள்.

2. சேதா - (செம்மை + ஆ) - அண்மையில் கன்று ஈன்ற பசு.

©TNTBS NOT TO BE REPUBLISHED

3. வித்து - விதை ; சித்து - மெய்யறிவு ; மேலான செயல்.

4. சுகந்தம் - நறுமணம் ; மஞ்சனநீர் - குளிப்பாட்டும் புனித நீர்.

### பயிற்சி

சேர்த்தெழுதுக : எல்லாம்+என் ; வித்து+இன்றி, யாங்கள்+உண்டோ.

பிரித்தெழுதுக : கனிந்திரங்கல் ; எனக்கென்று ; விளைவதுண்டோ.

எதிர்ச்சொல் தருக : அன்பு ; கனி ; வாராய்.

வினாக்களுக்கு விடைதருக :

1. இறைவன் அடியவர்க்கு எப்படி உதவுகிறான் என்று ஆசிரியர் கூறுகிறார் ?

2. இறைவன் பக்தர்களுக்குக் கருணைகாட்டும் தன்மையை விளக்கவந்த உவமையாது ?

3. விதையில்லாமல் விளைச்சல் இல்லை என்ற உவமை எதை விளக்க வந்தது ?

4. அடியவர் ஆண்டவனுக்குச் செய்கின்ற உண்மையான பூசையை ஆசிரியர் எவ்வாறு வருணிக்கிறார் ?

செய்முறை : உனக்குத் தெரிந்த வேறு கடவுள் வாழ்த்துப் பாடல்களை எழுதி ஆசிரியரிடம் பாடிக் காட்டுக.

ஒன்று பரம்பொருள்! நாம் அதன் மக்கள்!
உலகு இன்பக் கேணி

NOT TO BE REPUBLISHED @KTBS

# 2. காவிரித் தாய்

### (தன் வரலாறு கூறுதல்)

K2K4T9

அன்பான குழந்தைகளே,

குடகு மாவட்டத்துத் தலைக்காவேரி எனது பிறப்பிடம். கதை என்று சொல்லி எனது வாழ்க்கை வரலாற்றைக்கூற விழைகின்றேன். கவனமாகக் கேளுங்கள்! பார்க்கலாம்.

முன்னொரு காலத்தில் குடகு நாட்டில் பிரம்மகிரி என்ற மலையில் கவேர முனிவரும் அவரது மனைவியும் வசித்து வந்தனர். முனிவர் பிரமனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தார். பிரமன் தோன்றி என்ன வேண்டும் என்று கேட்டதும், குழந்தை வரம் கேட்டார் முனிவர். சென்ற பிறவியில் செய்த பாவம் காரணமாக உமக்குக் குழந்தை பிறக்காது, எனினும் உமது பக்தியைப் பாராட்டி எனது வளர்ப்புப் புதல்வியான லோபா முத்திரையை உமக்குப் பரிசாக அளிக்கிறோம் என்று கூறி லோபா முத்திரையைப் பரிசாகக் கொடுத்து மறைந்தார். கவேர முனிவர் லோபா முத்திரையைத் தம் மகளாகவே வளர்த்துவந்தார். கவேர முனிவர் என்னை வளர்த்ததால் எனக்குக் காவேரி என்ற பெயர் வந்தது.

சிறிது காலத்திற்குப் பின் என் தாய் தந்தை இறந்தனர். அகத்தியர் சிவ பெருமானைக் குறித்துத் தவம் செய்ய பிரம்ம கிரி வந்தார். என்னைக் கண்டு காதல் கொண்டார். என்னை விட்டு ஒரு கணமும் பிரிவதில்லை என்று வாக்களித்தால் மணப்பதாகக் கூறினேன். ஒரு நாள் அகத்தியர் 1.5 கி.மீ. தூரத்தில் உள்ள கணிகை நதியில் நீராடச் சென்றார்.

என்னை ஒரு பாத்திரத்தில் அடைத்துச் சிறு பிராமணச் சீடரிடம் ஒப்படைத்தார். எனக்கு மிகவும் கோபம் வந்தது. பிராமணச் சீடனைத் தவறி விழும்படிச் செய்தேன். பாத்திரம்

@KTBS
NOT TO BE REPUBLISHED

கீழே விழுந்ததும் நான் தப்பித்துக் கொண்டு நதியாக ஓடினேன். அதனைத் தடுக்க அணை கட்டினான் சீடன். எனவே நான் பூமிக்கு அடியில் புகுந்து, சிறிது தூரத்தில் வெளிப்பட்டேன். அகத்தியர் திரும்பி வந்து மன்னிப்புக் கேட்டார். நானும் மனமிரங்கி ஒரு பாதி நதியாகவும் ஒரு பாதி லோப முத்திரையாகவும் இருக்கச் சம்மதித்தேன். என்ன கேட்டீர்களா ? கதை நன்றாக உள்ளதா ?



பசுமை போர்த்திய அழகிய குடகு மலையில் 4800 அடி உயரத்தில் தலைக் காவேரி என்ற இடம் உள்ளது. அதற்கு மேல் 300 அடி உயரமுள்ள குன்று பிரம்மகிரி உச்சியாகும். அங்கு நான் நெல்லி மரத்தடியில் ஊற்றாக உற்பத்தியாகிறேன். ஊற்று இரண்டரை அடி சதுரம். தண்ணீரின் ஆழம் மூன்றரை அடி. ஊற்றின் மேல் கரையில் சிறிய கோவில்; கோவிலில் உருவச் சிலை இல்லை. வழிபாடு முழுவதும் ஊற்று நீருக்குத் தான். சிறு ஊற்றுக்கு முன்னால் சில அடிகள் தள்ளிப் பெரிய ஊற்று உள்ளது. நான் அங்கிருந்து பூமிக்கடியில் மறைந்து பலநூறு அடிகள் தள்ளி வெளிப்படுகிறேன். அங்கிருந்து 3 மைல் தூரத்திலுள்ள பாகமண்டலத்தை அடைகிறேன். அங்கு சுஜோதி என்ற இரு உடன் பிறவாச் சகோதரிகளும் என்னோடு இணைகிறார்கள். அதனால் இந்த இடத்தைத் திரிவேணி

© KTBS NOT TO BE REPUBLISHED

சங்கமம் என்று அழைக்கிறார்கள். இங்கு பாக மண்டலேசுவரர் ஆலயம் உள்ளது. பாகமண்டலத்திலிருந்து பிரம்மகிரி செல்லும் பாதை மிகவும் அழகானது. வழியில் உள்ள பாறை ஒன்றுக்கு பீமன் கல் என்று பெயர். பாண்டவர்கள் இங்கே தங்கினார்கள் என்பது வரலாறு. நான் குடகு முழுவதையும் கொழிக்கச் செய்கிறேன். திரிவேணி சங்கமத்திலிருந்து பாய்ந்து குசால்நகர், இராமநாத புரம், எஞ்சன கட்டி வழியாகக் கண்ணம்பாடியை அடைகிறேன். என்னிடம் உள்ள மிகுதியான தண்ணீரைக் கட்டுப் படுத்த அணைக் கட்டையும் பக்கத்தில் பிருந்தாவனம் என்ற அழகிய பூங்காவையும் பொறியியல் வல்லுநர் எம். விசுவேசுவரய்யா அவர்கள் அமைத்தார். என்னில் ஒரு பகுதியான கிருஷ்ணராஜசாகர் அணைக் கட்டைப் பார்க்க இந்தியாவில் மட்டுமின்றி உலகத்தின் பல் வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்த வண்ணம் இருக்கிறார்கள்.



பூங்காவில் இசைக்குத் தகுந்தாற்போல் நடனமாடும் நீரூற்று உள்ளது. அந்த நீரூற்றில் நான் என் மனம் விரும்பும் வண்ணம் நடனமாடித் தீர்க்கிறேன். பிறகு ஸ்ரீரங்கப் பட்டினம்

© KTBS NOT TO BE REPUBLISHED

என்னுமிடத்தில் முதன் முதலாக இரண்டாகப் பிரிகிறேன். சிறிது தூரம் சென்று மீண்டும் இணைகிறேன். தீவைப் போன்ற நடுப் பகுதியில் அரங்கநாதருக்கு ஆலயம் மிகவும் அழகாக அமைந்துள்ளது. பாற் கடலில் பள்ளி கொண்ட பரந்தாமனுக்கு நீர் அரணாக நான் இங்கு அமைந்துள்ளேன். இது ஆதி ரங்கம் என்றழைக்கப் படுகிறது. அருகே ரங்கனதிட்டு என்ற இடத்தில் பறவைகள் புகலிடமும் உள்ளது. பின்னர் தலைக்காடு சென்று சிவ சமுத்திரத்தில் நீர்வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றேன். இதுவே ககன சுக்கி பரசுக்கி என்பதாகும்.

சிவ சமுத்திரம் அருவி மளவள்ளியிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. இது தேசத்தின் மிகப் பழைய மின்சார உற்பத்தி நிலையம் ஆகும். இது 1902-ல் தொடங்கப் பட்டது. டிராலியில் சென்று மின்சாரம் எடுக்கும் இடத்தைப் பார்க்கலாம். இங்கும் நான் இரண்டாகப் பிரிந்து மீண்டும் கூடுகிறேன். தீவைப் போன்ற மையப் பகுதியில் அரங்க நாதனுக்கு ஒரு கோவில் உள்ளது. இதுவே மத்திய ரங்கமாகும். இக்கோயில் போசளர்கள் காலத்தின் கட்டடக் கலைக்குச் சிறந்த சான்றாகும். என்னுடன் கர்நாடகாவில் உள்ள கபிலா, ஹேமாவதி, அர்க்காவதி, ஷிம்சா, சுவர்ண முகி, உடுதாரே, தாரகா மற்றும் வடிஹொளே ஆகிய உடன்பிறப்புக்களும், இணைகிறார்கள். சிவசமுத்திரத்திலிருந்து மேக்கே தாட்டு வழியாகக் கருநாடகம் என்ற பிறந்தகத்திலிருந்து தமிழகம் என்ற புக்ககத்திற்கு வருகிறேன்.

தமிழகத்தில் ஒகனேக் கல்லில் மேலிருந்து தாவிக்குதித்து நீர் வீழ்ச்சியை ஏற்படுத்துகிறேன். இத்தகைய நீர்வீழ்ச்சிகள் எனக்கு ஏற்ற உடற்பயிற்சிகள். இங்கு என்னைக் காண எல்லா மாநிலத்தவரும் வருகின்றனர். மேட்டூரில் என்னுடைய ஓட்டத்தைக் கட்டுப் படுத்தி ஓர் அணை கட்டியுள்ளார்கள். பின்னர் சேலம், ஈரோடு மாவட்டத்தைக் கடந்து

NOT TO BE REPUBLISHED ©KTBS



திருவரங்கத்தை அடைகிறேன். நான் சென்ற இடமெல்லாம் விரிந்து பசுமையான சோலைகளை ஏற்படுத்துவதால் காவிரி என்று அழைக்கிறார்கள். திருச்சிராப்பள்ளியில் அகண்ட காவிரி என்று போற்றப்படுகின்றேன். ஸ்ரீரங்கத்தில் இரண்டாகப் பிரிந்து மீண்டும் இணைகிறேன். மையத்தில் உலகப் புகழ் வாய்ந்த அரங்க நாதர் தேவாலயம் உள்ளது.

ஆண்டுதோறும் ஆடி 18 அன்று எனக்கு வழிபாடு செய்து ''பதினெட்டாம் பெருக்கு'' என்று எனக்கே உரிய விழா கொண்டாடுவார்கள். ஐப்பசி மாதத்திலும், மார்கழி மாதத்திலும் விடியற்காலையில் நீராடுவார்கள். இங்கிருந்து கல்லணைக்குச் செல்கிறேன். சோழர்களில் சிறந்தவன் கரிகால் சோழன். அவனுடைய சிறப்புக்குக் காரணம் அவன் எனக்குக் கரைகளும், அணைகளும் அமைத்ததே. அணைக் கட்டு என்றால் என்ன என்று மற்றவர்கள் அறியாதிருந்த காலத்தில் தமிழர்கள் நீரைத்தேக்கிப் பயன்படுத்திக் கொள்வதில் வல்லவர்களாக இருந்தார்கள். காவிரியின் வெள்ளம் சோழ நாட்டில் பெரும் சேதங்களை விளைவித்து வந்தது. அந்த அழிவுகளைத் தடுத்துக் காவிரிக்கு கரைகளும், அணைகளும்

© KTBS NOT TO BE REPUBLISHED

அமைத்து வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி உழவர்கள் நல்வாழ்வுக்கு உதவினான் கரிகாலன். நன்றி மறவாத உழவர்கள் ஆடிமாதம் 18ம் நாள் அன்று காவிரியில் வரும் புது வெள்ளத்தின் பொலிவும் பெருமிதமும் கண்டு காவிரித்தாய்க்குக் காணிக்கையாக மங்கலப் பொருட்களை வழங்கி வழிபடுகிறார்கள், இதுவே 'ஆடிப் பெருக்கு' என்னும் நன்றி தெரிவிக்கும் நல்விழாவாகும்.

கல்லணையிலிருந்து திருவையாறு, கும்பகோணம் மயிலாடுதுறை வழியாகப் பாய்ந்து காவிரிப்பூம்பட்டினம் என்று அழைக்கப்படும் பூம்புகார் வழியாக வங்காள விரிகுடாவில் சங்கமிக்கிறேன். நான் பூம்புகாரில் கடலில் சங்கமிப்பதற்கு முன் தமிழகத்தில் பாயும், பவானி, அமராவதி, நொய்யல், வரதாம, தோப்பியார், நாகவதி, சிண்ணார் மற்றும் சில துணை நதிகளுடன் இணைந்து விவசாயிகளுக்கும் மக்களுக்கும் பயனளிக்கிறேன். கருநாடகத்தில் கபினி, ஹாரங்கி, கண்ணம்பாடி மற்றும் ஹேமாவதி அணைகள் உள்ளன. இருந்தாலும் காவிரி என்றால் கருநாடகத்தில் கண்ணம்பாடியும், தமிழகத்தில் மேட்டூர் அணையுமே உடனடியாக நினைவுக்கு வரும். எனக்குக் காவிரி என்று பெயர் வைத்தவர்கள் தமிழர்கள். நான் கருநாடக தமிழக உழவர் பெருமக்களின் உயிராறு மட்டுமின்றிப் பயிராறு ஆகவும் விளங்கிப் பயன் தருகின்றேன். என்னைக் காவிரித் தாய் என்று போற்றுகின்றனர். என்னுடைய மொத்த நீளம் 770 கி.மீ. காவிரி சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் ஆண்டு தோறும் 2700 மி.மீ. மழை பெய்கிறது. குடகு மாவட்டத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் காவேரி என்ற பெயர் இருக்கும். ஆண்கள் கூட காவேரி என்று பெயர் வைத்துக் கொள்வார்கள். தமிழகத்தில் என்னைப் பொன்னி என்று பெருமையுடன் அழைக்கிறார்கள்.

NOT TO BE REPUBLISHED @KTBS

இவ்வாறு இரண்டு மாநிலத்து மக்களுடைய வரலாறு பண்பாடு இவற்றோடு பின்னிப் பிணைந்து வருகின்ற எனக்கு மூவாவரமும், சாகாவரமும் இயற்கை அளித்துள்ளது. வளர்ந்து வரும் பிள்ளைகளாகிய உங்களுக்கு எல்லாவற்றையும் கூறியதில் பெருமை அடைகிறேன்.

அருஞ்சொற்பொருள் :

பூங்கா : சோலை, புக்ககம் : கணவன்வீடு, உயிராறு : ஜீவநதி. பயிராறு : பயிர்கள் விளைவிக்கின்ற ஆறு, திரிவேணி சங்கமம் : மூன்று ஆறுகள் சேருமிடம், மூவாவரம் : வயதாகாத தன்மை. சாவாவரம் : இறப்பில்லாத தன்மை.

## பயிற்சி

**I.** சேர்த்து எழுதுக :

1) மனம் + இரங்கி =
2) விடியல் + காலை =
3) அறியாது + இருந்த =
4) பயன் + அளிக்கிறேன் =
5) மேல் + கரை =
6) பால் + கடல் =
7) தொடங்க + பட்டது =
8) உடல் + பயிற்சி =
9) அறியாது + இருந்த =
10) ஆடி + பெருக்கு =

**II.** பிரித்தெழுதுக :

1) கடுந்தவம் =
2) பிரிவதில்லை =
3) அணைக் கட்டு =
4) மாநிலம் =
5) தாவிக் குதித்து =
6) விடியற்காலை =

@KTBS NOT TO BE REPUBLISHED

**III. எதிர்ச்சொல் தருக.**

1) பாவம் ×  2) பசுமை ×

3) பழைய ×  4) அகண்ட ×

5) தொலைவு ×

**IV. சொந்தத் தொடரில் அமைக்க :**

சோலை, காணிக்கை, பரிசு, பூங்கா, அருவி, அணைக்கட்டு.

**V. ஓரிரு தொடர்களில் விடைதருக :**

1) காவிரியின் பிறப்பிடம் எது ?
2) சிவ பெருமானைக் குறித்துத் தவம் செய்தவர் யார்?
3) திரிவேணி சங்கமம் என்றால் என்ன ?
4) விசுவேசுவரய்யா என்பவர் யார் ?
5) ஆதி ரங்கம் என்று அழைக்கப்படுவது எது ?
6) சிவசமுத்திரம் நீர் அருவி எங்குள்ளது ?
7) தமிழகத்தில் காவிரி தாவிக்குதிப்பது எவ்விடம் ?
8) காவிரி என்பதன் பொருள் யாது ?
9) அகண்ட காவிரி எங்குள்ளது ?
10) கல்லணை கட்டிய சோழ அரசன் யார் ?

**VI. நான்கு அல்லது ஐந்து தொடர்களில் விடை எழுதுக.**

1) காவிரி என்ற பெயர் எவ்வாறு வந்தது ?
2) காவிரி தான் ஆறாக மாறியக் கதையை எழுதுக.
3) கண்ணம்பாடி அணையைப் பற்றி எழுதுக.
4) கரிகாலனின் சிறப்புக்குக் காரணம் என்ன ?

© KTBS NOT TO BE REPUBLISHED

5) உழவர்கள் நன்றி மறவாதது எவ்வாறு ?

6) காவிரியுடன் இணையும் ஆறுகள் யாவை?

**VII. கோடிட்ட இடங்களை நிறைவு செய்க.**

1) கவேர முனிவர் வளர்த்ததால் ........... என்ற பெயர் வந்தது.

2) ............ முனிவர் திரும்பி வந்து மன்னிப்பு கேட்டார்.

3) பாக மண்டலத்தில் இருப்பது ............. ஆலயம்.

4) காவிரியுடன் ......... ........... கலப்பதால் திரிவேணி சங்கமம் என்று அழைக்கப்படுகிறது.

5) கண்ணம்பாடி அணையை வடிவமைத்தவர் .............

6) ........... என்னுமிடத்தில் பறவைகள் புகலிடம் உள்ளது.

7) தமிழ் நாட்டில் ............. என்னுமிடத்தில் நீர் அருவி உள்ளது.

8) உழவர்களின் நல்வாழ்வுக்கு உதவியவர் ...........

9) காவிரிப்பூம்பட்டினம் என்று அழைக்கப்படுவது ...........

10) காவிரியின் மொத்த நீளம் ............. கி.மீ.

**VIII. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1) கவேர முனிவரும் அவர் மனைவியும் தவம் செய்த மலை.

அ) இந்திர கிரி ஆ) சந்திரகிரி

இ) பிரம்மகிரி ஈ) கிருஷ்ணகிரி

NOT TO BE REPUBLISHED @KTBS

2) குடகு மலையின் உயரம்.

அ) 3800 அடி ஆ) 4800 அடி

இ) 5800 அடி ஈ) 2800 அடி

3) பொன்னி என்று அழைக்கப்படும் ஆறு

அ) கங்கா ஆ) துங்கபத்ரை

இ) காவிரி ஈ) கோதாவரி

### பயிற்சி

1) காவிரி செல்லும் வழியை இந்திய வரைபடத்தில் காண்பிக்கவும்.

2) இந்தியாவின் பல்வேறு ஆறுகளை பற்றி ஆசிரியர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்க.

### படித்து மகிழ்க

| | | | | |
|---|---|---|---|---|
| | கா | கா | | |
| | மா | மா | | |
| | கு | ட | கு | |
| | பா | ப் | பா | |
| வி | க | ட | க | வி |
| தே | ரு | வ | ரு | தே |
| மோ | ரு | போ | ரு | மோ |
| தே | ளு | மீ | ளு | தே |

| | | |
|---|---|---|
| சி | வா | ஜி |
| வா | யி | லே |
| ஜி | லே | பி |

@KTBS
NOT TO BE REPUBLISHED

# I. இலக்கணம்

ஒரு மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் துணைபுரிவது இலக்கணம்.

தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை பின்வருமாறு :

1. எழுத்து இலக்கணம்
2. சொல் இலக்கணம்
3. பொருள் இலக்கணம்
4. யாப்பு இலக்கணம்
5. அணி இலக்கணம்

எழுத்துக்களின் இயல்புகளை விளக்குவது எழுத்து இலக்கணம்.

சொற்களின் இயல்புகளை விளக்குவது சொல் இலக்கணம்.

அகம், புறம் ஆகிய பொருள்களை விளக்குவது பொருள் இலக்கணம்.

செய்யுள் அமைப்பை விளக்குவது யாப்பு இலக்கணம்.

செய்யுளில் அமைந்துள்ள அணிகளை விளக்குவது அணி இலக்கணம்.

**வினாக்கள்**

1. இலக்கணம் என்றால் என்ன ?
2. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

© KTBS NOT TO BE REPUBLISHED

## 3. அறவுரை

R1N7B5

# 1. திருக்குறள்

*இனியவை கூறல்*

*1.* பணிவுடையன் இன்சொலன்ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற

பொருள் : பணிவுடையவனாகவும் இனிய சொற்களைக் கூறுபவனாகவும் இருத்தலே ஒருவனுக்கு அழகாகும். மற்றவை எல்லாம் அழகு இல்லை.

*2.* இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

பொருள் : இனிய சொற்கள் இருக்கும் போது தீய சொற்களைப் பேசுதல் பழம் இருக்கும் போது காயை விரும்புதற்குச் சமம்.

*3.* தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

பொருள் : ஒருவன் தன்னெஞ்சறிந்த ஒன்றினைப் பிறருக்குத் தெரியாது என்று பொய் சொல்லுவதைத் தவிர்த்திடுக ; ஏனென்றால் அவ்வாறு பொய் கூறினால் அதனை அறிந்த தன் நெஞ்சமே சான்றாக இருந்து தனக்குத் துன்பத்தை உண்டாக்கும்.

*4.* எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு

©KTBS NOT TO BE REPUBLISHED

பொருள் : புறத்தில் உள்ள இருளைப் போக்கும் உலகத்து விளக்குகள் எல்லாம் விளக்குகள் ஆகா ; பெரியோர்க்கு விளக்கு என்று சொல்லப்படுவது மனத்தின் இருளைப் போக்கும் வாய்மையாகிய விளக்கே ஆகும்.

### கல்வி

5. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

பொருள் : கற்றவர்களுடைய கண்கள் தான் கண்கள்; கல்லாதவர் கண்கள் வெறும் புண்களே.

6. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

பொருள் : மணலைத் தோண்டத் தோண்ட தண்ணீர் ஊறுவது போலப் படிக்க படிக்கத்தான் அறிவு வளரும்.

### ஊக்க முடைமை

7. வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

பொருள் : நீர்ப் பூக்களின் தண்டின் நீளம் அவை நின்றுள்ள நீரின் அளவைப் பொறுத்ததாகும். அதைப் போல மனிதர்களின் ஊக்கத்தின் அளவே அவர்களின் வாழ்க்கையின் உயர்வும் இருக்கும்.

8. உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

©KTBS
NOT TO BE REPUBLISHED

பொருள் : எண்ணுவ தெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ண வேண்டும் : ஒரு வேளை அவ்வுயர்ந்த எண்ணம் கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.

### பண்புடைமை

9. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபாராட்டும் உலகு.

பொருள் : நீதியையும் அறத்தையும் விரும்பிப் பிறருக்குப் பயன்படும் வாழ்க்கை உடையாரது பண்பினை உலக மக்கள் சிறப்பித்துக் கொண்டாடுவர்.

10. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

பொருள் : நன்மக்கட்குரிய பண்பு இல்லாதவர் அரத்தின் கூர்மை போன்ற அறிவுக் கூர்மை யுடையவராயினும் ஓரறிவுடைய மரத்தைப் போன்றவரே.

NOT TO BE REPUBLISHED @KTBS

### ஆசிரியர் குறிப்பு

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவரைப் பற்றிய உண்மை வரலாறு தெரிந்திலது. இவர் சிறப்பை விளக்கச் செவிவழிச் செய்திகள் பல வழங்குகின்றன. இவரை முதற்பாவலர், செந்நாப் போதார், பொய்யில் புலவர், பெருநாவலர், தேவர் முதலிய பெயர்களாலும் போற்றுகின்றனர். இவர் கி.மு. 31 இல் பிறந்தவர் என உறுதி செய்யப்பட்டுத் ‘திருவள்ளுவர் ஆண்டு’ கணிக்கப்பட்டுள்ளது. இவர் தம் குடிப் பெயரைத் தம் பெயராக்கிக்கொண்டவர் என்பர். இவர் பிறந்தமையால் தமிழ்மொழியும் தமிழ்நாடும் பெருமை

பெறுகின்றது. எனவேதான் பாரதியார் ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' எனப்பாடினார்.

## நூற் குறிப்பு

மக்கள் அனைவரும் தம் வாழ்வில் பின்பற்றி உயர்வு அடையத்தக்க சிறந்த கருத்துக்களை எடுத்துரைப்பது திருக்குறள். சுருக்கமான அடிகளில் விரிவான பொருளை அளந்து காட்டுவது. மொழி, இனம், மதம், காலம் ஆகியவற்றைக் கடந்து நிற்பது. எனவே 'உலகப் பொதுமறை' எனப் போற்றப்பெறுகிறது. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் தலை சிறந்தது. மக்கள் வாழ்வில் அடையத்தக்க உறுதிப் பொருள்கள் நான்கில் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் விரித்து உரைப்பது. எனவே 'முப்பால்' என்னும் பெயர் பெற்றது. 133 அதிகாரங்களையும் 1330 குறட் பாக்களையும் பெற்றிருப்பது. வாயுரை வாழ்த்து, பொதுமறை, தமிழ்மறை, பொய்யாமொழி, தெய்வ நூல் என்னும் பெயர்களும் இதற்கு உண்டு.

## அருஞ்சொற் பொருள் :

அணி = அழகு
இன்னாத = தீய
சுடும் = வருத்தும்
சான்றோர் = அறிவுடையோர்
அனைய = போல
மாந்தர் = மனிதர்
தள்ளினும் = நிறைவேறா விடினும்
நன்றி = அறம்
அரம் = வாள்

© KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சி

**I.** சேர்த்தெழுதுக :

1) கனி + இருப்ப = ............

2) கவர்ந்து + அற்று = ............

3) பணிவு + உடையன் = ............

4) உள்ளுவது + எல்லாம் = ............

**II.** பிரித்து எழுதுக :

1) தன்னெஞ்சு = ........... + ...........

2) கண்ணுடையார் = ........... + ...........

3) மலர்நீட்டம் = ........... + ...........

4) மக்கட்பண்பு = ........... + ...........

**III.** எதிர்ச்சொல் எழுதுக :

1) இனிய × ................

2) பொய் × ................

3) உயர்வு × ................

4) மக்கள் × ................

**IV.** சொந்தத் தொடர்களில் பயன்படுத்துக :

1. இனிய  2. சுடும்  3. அறம்  4. விளக்கு

**V.** கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒரே தொடரில் விடை எழுதுக:

1) தீய சொற்களைப் பேசுவது எதைப் போன்றது ?

2) எது எல்லா அறமும் தரும் ?

3) எதைப் பற்றி எண்ணுவது சிறந்தது ?

@KTBS NOT TO BE REPUBLISHED

**VI.** கீழ்க்கண்ட வினாக்களுக்கு இரு தொடர்களில் விடை எழுதுக :

1) அறிவு எவ்வாறு வளரும் ?

2) நன்மக்கட்குரிய பண்புகள் இல்லாதவர் எதைப் போன்றவர் ?

செய்முறை :

திருக்குறள் போன்று தமிழில் எழுந்த அறநூல்களை முடிந்தவரையில் பட்டியல் இடுக.

| |
|---|
| அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்திக் குறுகத் தரித்த குறள். |

@KTBS NOT TO BE REPUBLISHED

X8R1M6

## 4. அன்னை அமைத்த ஆலயங்கள்



உலகின் மிகச்சிறந்த விருதான நோபல் பரிசையும், இந்தியாவின் மிகச்சிறந்த விருதான 'பாரத ரத்னா' வையும் ஒருசேரப் பெற்ற பெருமைக் குரியவர் அன்னை தெரசா அவர்கள். அன்னை தெரசா தொண்டின் திரு உருவம், அன்பின் மறுவடிவம், இரக்கத்தின் எடுத்துக்காட்டு. அன்னையின் வாழ்க்கை வரலாறு மானுடம் தன்னைத்தானே உயர்த்திக் கொண்டதற்கோர் சான்று. மனிதர்களுக்காக - அவர்களுள்ளும் நலிந்தோர்களுக்காக அன்னை அமைத்த ஆலயங்கள் இன்றும் அவர் புகழை உலகில் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றன.

1948-ஆம் ஆண்டு அன்னை தெரசாவின் வாழ்வேட்டில் என்றும் ஒளிரும் எழிலாண்டு. மருத்துவப் பயிற்சியைப் பாட்னாவில் மதிப்புடன் முடித்துக் கல்கத்தாவிற்கு வந்த அன்னை தெரசா அவர்கள் டிசம்பர் 21-ஆம் நாள் மோத்தி ஜில் சேரிப் பகுதியில் ஒரு சிறிய வீட்டில் பள்ளி ஒன்றைத் தொடங்கினார். அப்பொழுது பயில வந்தவர்கள் 21 ஏழைப் பிள்ளைகளே. நாளடைவில் பள்ளியில் மாணவர் எண்ணிக்கை பெருகியது. இருக்கும் இடம் போதவில்லை. அன்னை தெரசாவின் உயர்ந்த உழைப்பைக் கண்டு சிலர் பண உதவி புரிய முன்வந்தனர். இந்த உதவி அவருள்ளத்தில் பொருளா தாரத்தைப் பெருக்க வழிகாட்டிற்று. அன்னை தெரசா பள்ளிக்காகச் செல்வர்களிடம் நிதி திரட்டலானார். அன்னை

NOT TO BE REPUBLISHED @KTBS

தெரசாவின் குருவான தவத்திரு வேன் அவர்களின் வேண்டுகோளின்படி தாமஸ் சகோதரர்கள், அவர்கள் வீட்டின் மேல்மாடிப் பகுதியைப் பள்ளி நடத்தத் தருவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறினார்கள். அன்னை தெரசா அவர்களும் மகிழ்ச்சியோடு அவர்கள் உதவியை ஏற்றுக்கொண்டு, அவர்கள் வீட்டு மாடிப்பகுதியில் தம்பள்ளியை இடமாற்றித் தொடர்ந்து நடத்திவந்தார்.

இந்நிலையில், அன்னையார் தொடங்கிய பள்ளி, மாணவர்கள் எண்ணிக்கை மிகுதியாலும், பொருளாதாரக் கட்டமைப்பாலும் பெரும் இயக்கமாய் வளர்ந்தது. இவ்வியக்கம் என்றும் நின்று, நன்கு பணியாற்ற வேண்டுமென்றால், இவ்வியக்கத்ததைப் பொது நிறுவனமாகப் பதிவு செய்தல்வேண்டும் என்று அன்னையார் எண்ணினார். தம் சமயகுரு தவத்திரு வேன் அவர்களின் வாழ்த்தைப் பெற்று 1950-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7-ஆம் நாள் தம் இயக்கத்திற்கு ‘‘அறப்பணி இயக்கம்’’ என்று பெயரிட்டுப் பதிவுசெய்தார். ‘‘அறப்பணி இயக்க’’ விதிமுறைகள் கிருத்துவக் கன்னியர் மடத்தின் விதிமுறைகளை விடக் கடுமையாக இருந்தன. கற்பை உயிராகக் கருதுதல், எளிய வாழ்க்கை வாழ்தல், பணிவோடு நடத்தல், வருவாய் பெறாமல் உழைத்தல் என்ற நான்கு அடிப்படையான உறுதிப்பாடுகள் பொன்னேபோல் போற்றப்பட்டன.

ஒருமுறை அன்னை தெரசா வெளியில் சென்று கொண்டிருந்தபோது, நெஞ்சத்தை நெகிழவைக்கும் காட்சியொன்றைக் கண்டார். மரத்தடியில் ஒருவன் சுருண்டு படுத்திருப்பதைக் கண்டார். அவன் எந்த நிமிடத்திலும் இறக்கக் கூடிய நிலையில் இருந்தான். அவனை உடனே அருகில் உள்ள மருத்துவநிலையத்திற்கு அழைத்துச் சென்றார்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

அவன் உயிரைக் காப்பாற்றிவிடலாம் என்று அன்னைக்குத் தோன்றியது. எனவே பக்கத்தில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அவனை மருத்துவ மனையில் சேர்த்துக் கொண்டு அவனைக் காப்பாற்றுமாறு வேண்டினார். அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும் மருத்துவம் செய்யும் மருத்துவ நிலையம் இது அன்று என்று கூறி மறுத்துவிட்டனர். அங்கிருந்த பொறுப்பாளர்கள் திரும்பி வந்து நோயாளியைப் பார்த்த அன்னையார் துணுக்குற்றார். நோயாளி இறந்து கிடந்தான் ! அன்னையின் கண்கள் நீரைச் சொரிந்தன.

இவ்வாறு மருத்துவ உதவியின்றி அனாதையாக இறக்கும் நோயாளிகளைக் காப்பாற்ற அன்னை ஒரு திட்டம் தீட்டினார். இதற்காக ஓர் இடமும் தேவைப்பட்டது. கல்கத்தா நகரில் உள்ள காளிக்கட்டம் என்ற புகழ்வாய்ந்த கோயிலில் உள்ள 'தர்மசாலா' என்ற கட்டடம் இந்நிலையத்திற்குத் தகுதியாக இருக்குமென்று கருதினார். அன்னையாரின் அறப்பணிகள் அனைத்தும் அறிந்த அதிகாரிகள் அங்கு அத்தகைய இல்லம் நடத்த அகமுவந்து ஒப்புதல் அளித்தனர்.

1952-ஆம் ஆண்டு 'தர்மசாலா' கட்டடத்தில் ஆதரவற்று இறக்கும் நிலையில் உள்ள பிணியாளர்களுக்காக ஓர் இல்லத்தை அன்னையார் தொடங்கினார். இவ்வில்லத்திற்கு 'நிர்மல் இருதயம்' என்ற வங்காள மொழிப் பெயரைச் சூட்டினார். தூய்மையான உள்ளம் என்பது இதன் பொருள். இறக்கும் நிலையில் உள்ள பிணியாளர்களைக் கவனிக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்தார். ஆதரவற்ற பிணியாளர் அரவணைப்பு இல்லமான ''நிர்மல் இருதயம்'' அன்னை தெரசாவின் மணிமுடியில் ஓர் வைரமாக ஒளிர்ந்தது.

ஒருநாள் தற்செயலாக அன்னையார் குப்பைத் தொட்டியில் அசைந்து நெளிந்துகொண்டிருந்த ஒரு துணிமூட்டையைப் பார்த்து எடுத்துவந்து பிரித்துப் பார்த்தார். உள்ளே ஒரு சின்னஞ்

NOT TO BE REPUBLISHED © KTBS

சிறுகுழந்தையைக் கண்டார். அவருடைய அருள் உள்ளம் இரங்கித் துடித்தது. இதுபோன்ற எத்தனை குழந்தைகள் கேட்பாரற்றும், காப்பாரற்றும் மடிகின்றனவோ? என்று எண்ணிய அன்னையார் இத்தகைய அனாதைக் குழந்தைகளுக்கு ஒரு காப்பகம் இருந்தால் அவை வளர்ந்து பெரியவர்கள் ஆவதற்கு நன்றாக இருக்குமே என்று எண்ணினார். அறப்பணி இயக்க இல்லத்திற்கு அருகிலேயே ஓர் வீடு கிடைத்தது. அங்கேயே 'சிசுபவனம்' என்ற பெயரில் அனாதைக் குழந்தைகள் காப்பகம் ஒன்றை அமைத்தார். 'சிசு பவனம்'' ஆற்றும் உயரிய தொண்டை உலகமே அறிந்து போற்றத் தொடங்கியது.

அமெரிக்காவின் நாடாளுமன்ற உறுப்பினர் எட்வர்ட் கென்னடி அன்னை தெரசாவின் அயரா உழைப்பையும், அறச் செயல்களையும் கேள்வியுற்றுத் தம் தந்தையார் பெயரில் ஓர் அறக்கட்டளை அமைத்து அதன்வழி ஐம்பதாயிரம் டாலர் நன்கொடையாக அன்னைக்கு வழங்கினார். அத்தொகையிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு அக்குடும்பத்தினர் பெயரில் 'நிர்மல் கென்னடி சிசுபவன்' என்ற மற்றொரு சேய்பாதுகாப்பகம் ஏற்படுத்தினார்.

அடுத்ததாக, அன்னையாரின் கவனம் தொழுநோயாளிகளின்பாற் சென்றது. தொழுநோய் என்பது மனிதனுக்கு வருகின்ற நோய்களிலேயே மிகக் கொடுமையானது. அதனால்தான் அந்நோயை நாம் 'பெரிய' என்றபொருளில் 'பெருநோய்' என்று அழைக்கிறோம். தொழுநோயால் துன்புற்று வருந்திய, சமூகத்தால் வெறுத்தும், அருவருத்தும் ஒதுக்கப்பட்ட இந்நோயாளர்களுக்கு ஒரு தெய்வ மருத்துவராக அன்னை அமைந்து அவர்களுக்கென ஒரு ''தொழுநோயர் இல்லம்'' கண்டார்.

NOT TO BE REPUBLISHED @KTBS

தொழுநோயாளிகளிடம் அண்ணல் காந்தி இரக்கம்கெண்டு அவர்களுக்கு உதவிசெய்தார். ஆல்பிரட் சுவைட்சர் என்னும் மருத்துவர் அந்நோய் தன்னைத் தாக்கும் என்று அறிந்தும் தொழுநோயாளிகளுக்கு மருத்துவம் செய்தார். இந்நோய் வகைகளில் ஒன்றிரண்டைத் தவிர மற்றவை தொற்றுநோய் அல்ல. இத்தகைய நோயால் பிணிக்கப்பட்டவர்களுக்கு அன்பும், ஆதரவும், கருணையும், கவனிப்பும் மிகமிகத் தேவை. இதனை உணர்ந்து தெரசா அன்னையார் முதலில் தொழு நோயாளித் தொண்டர்களுக்குச் சிறந்த பயிற்சி அளித்தார். போதிய பொருளாதாரத்தைப் பெருக்கத் ‘தொழுநோயாளர் துயர் துடைப்பு நிதி’ என்ற ஒன்றை ஏற்படுத்தி நிதி திரட்டினார்.

கல்கத்தா புறநகரில் கோப்ரா என்னும் இடத்தில் ‘தொழு நோயர் இல்லத்தினை அன்னை அமைத்தார். முதலில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருந்த தொழுநோயாளிகள் அன்னையின் திட்டமிட்ட, அன்பான பணியை அறிந்து எண்ணிக்கையில் பெருகினர். இல்லம் வளர்ந்தது போலவே, கல்கத்தா நகரமும் வளர்ந்ததனால், நகருக்கு வெளியே ‘டிட்டகார்ட் தொழுநோயாளர் இல்லம்’ என்ற புதிய இல்லத்தைத் தோற்றுவித்தார். அன்னையின் அருள் உள்ளத்தால் தோற்றம் பெற்ற இல்லங்களில் இத் தொழுநோயாளர் இல்லம் மிகச் சிறப்பானது.

இவ்வாறு தெரசா அன்னையார் அமைத்த ஆலயங்களில் ஆதரவு அற்றவர்களும், அனாதைக் குழந்தைகளும், தொழுநோயாளிகளும் கடவுளர்களாக வழிபடப்படும் - பக்திசெலுத்தப்படும் நிலை உருவானது பாரதத்திற்கே பெருமையாகும்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

அருஞ்சொற்பொருள் :

ஆலயம் - கோயில் ; ஒளிரும் - புகழ்பரப்பும் ; கன்னியா மடம் - கிருத்துவத்தொண்டு செய்யும் பெண்கள் வசிக்கும் இடம் ; அனாதை - எதும், யாரும் அற்றவர் ; தொண்டு - பணி, இரக்கம் - கருணை ; நலிந்தோர் - ஏழைகள் ; அறப்பணி - சமூக சேவை ; அரவணைப்பு - பாதுகாப்பு ; வருவாய் - வருமானம்; நிதி - பொருள், பணம் ; அருள் இல்லம் - கருணை வீடு ; துயர் துடைப்பு நிதி - துன்பம் நீக்கும் பணம் ; திரட்டுதல் - சேகரித்தல் ; நன்கொடை - நற்செயல்களுக்குக் கொடுக்கும் பணம் ;

NOT TO BE REPUBLISHED @KTBS

## பயிற்சி

**I.** சேர்த்தெழுதுக :

1) வாழ்வு + ஏட்டில் = .............
2) அறம் + பணி = .............
3) அருள் + இல்லம் = .............
4) நல்ல + செயல்கள் = .............
5) நாள் + அடைவில் = .............

**II.** பிரித்தெழுதுக :

1) பெருமைக்குரியவர் = .............. + ..............
2) ஒன்றைத்தொடங்கினார் = .............. + ..............
3) உழைப்பைக் கண்டு = .............. + ..............
4) வேண்டுமென்றால் = .............. + ..............
5) துணுக்குற்றார் = .............. + ..............

6) காளிக்கட்டம் = ............. + .............

7) அகமுவந்து = ............. + .............

8) குப்பைத்தொட்டி = ............. + .............

9) ஐம்பதாயிரம் = ............. + .............

10) சிறப்பானது = ............. + .............

**III. எதிர்ச்சொல் தருக.**

1) உயர்த்தி × .............

2) பெருகியது × .............

3) ஏற்று × .............

4) ஏழை × .............

5) தோற்றம் × .............

6) பிறப்பு × .............

7) கோபம் × .............

8) நகர்ப்புறம் × .............

9) சிறிய × .............

**IV. கோடிட்ட இடங்களைத் தக்க சொற்களால் நிரப்புக :**

உலகின் மிகச் சிறந்த விருதான .............. யும், இந்தியாவின் மிகச் சிறந்த விருதான ................ வையும் ஒரு சேரப் பெற்ற பெருமைக்குரியவர் அன்னை தெரசா ........... ஆம் ஆண்டு அன்னை தெரசாவின் வாழ்வேட்டில் என்றும் ஒளிரும் எழிலாண்டு ................ சேரிப்பகுதியில் ஒரு சிறிய வீட்டில் ............. ஒன்றைத் தொடங்கினார்.

NOT TO BE REPUBLISHED @KTBS

**V.** ஓரிரு தொடர்களில் விடைதருக :

1) அன்னை தெரசா பெற்ற விருதுகளின் பெயர்களை எழுதுக.

2) முதன்முதலில் பள்ளி தொடங்கும் பொழுது எத்தனை மாணவர்கள் இருந்தனர் ?

3) அன்னை தெரசாவின் குருவின் பெயர் என்ன ?

4) அறப்பணி இயக்கம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

5) அன்னை தெரசா மரத்தடியில் என்ன காட்சியைக் கண்டார் ?

**VI.** இரண்டு-மூன்று தொடர்களில் விடை தருக.

1) அன்னை தெரசாவின் குணநலனை எழுதுக.

2) அனாதையாக இறக்கும் நோயளிகளைக் காப்பாற்ற அன்னை என்ன திட்டம் தீட்டினார்?

3) 'நிர்மல் இருதயம்' அன்னை தெரசாவிற்கு எவ்வாறு அமைந்தது ?

4) அனாதைக் குழந்தைகள் காப்பகத்தின் பெயர் யாது?

5) எட்வர்டு கென்னடி அன்னை தெரசாவிற்கு எவ்வளவு பணம் கொடுத்தார் ? எதற்காகக் கொடுத்தார் ?

**VII.** நான்கு அல்லது ஐந்து தொடர்களில் விடைதருக.

1) அன்னை தெரசா அமைத்த அறச் செயலுக்கான நிறுவனங்களின் பெயர்களை எழுதுக.

NOT TO BE REPUBLISHED
© KTBS

2) அன்னை தெரசாவின் அறப் பணிகளுக்கு உதவியவர்களின் பெயர்களைத் தொகுத்தெழுதுக.

3) அன்னை அமைத்த தொழுநோயர் இல்லம் பற்றிக் குறிப்பு வரைக.

**VIII. செயல்முறை**

ஆல்பிரட் சுவைட்சர் அவர்களின் சமுதாயத் தொண்டுபற்றிய விவரங்களைக் கேட்டறிந்து பதினைந்து தொடர்களில் கட்டுரை வரைக.

## II. இலக்கணம்

### அ. எழுத்து

சொல்லுக்கு முதற்காரணமாகிய ஒலியே எழுத்து எனப்படும்.

எழுத்தை ஒலிக்கும்போது காதால் மட்டுமே கேட்க முடியும். இதனை 'ஒலி வடிவம்' என்பர். இன்னின்ன ஒலிக்கு இன்னின்ன அடையாளம் என்று கண்ணுக்குத் தெரியும்படி எழுதுகின்ற வடிவத்தை 'வரிவடிவம்' என்பர்.

**எழுத்தின் வகை :**

தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்கள் வருமாறு :

1. உயிர் எழுத்து
2. மெய் எழுத்து
3. உயிர்மெய் எழுத்து
4. ஆய்த எழுத்து

@KTBS NOT TO BE REPUBLISHED

## 1. உயிர் எழுத்து

உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு, அவை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன. உயிர் எழுத்துக்கள் உயிர் போலத் தனித்து இயங்கும் ஆற்றல் உடையவை. வேறு எழுத்துக்களின் துணையின்றித் தாமே ஒலிக்கக் கூடியவை. இவை உடம்பை இயங்க வைக்கும் உயிரைப்போல, மெய் எழுத்துக்களை இயங்க வைக்கின்றன. ஆகையால் இவற்றை ''உயிர் எழுத்துக்கள்'' என்பர்.

### குற்றெழுத்து, நெட்டெழுத்து

உயிர் எழுத்துக்கள் குற்றெழுத்து, நெட்டெழுத்து என இருவகைப்படும். இவற்றைக் குறில், நெடில் என்றும் கூறுவர்.

குறுகிய ஓசையுடைய எழுத்து குற்றெழுத்து எனப்படும். குற்றெழுத்துக்கள் ஐந்து ஆகும். அவை அ,இ,உ,எ,ஒ என்பன.

நீண்ட ஓசையையுடைய எழுத்து நெட்டெழுத்து எனப்படும். நெட்டெழுத்துக்கள் ஏழு ஆகும். அவை ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ என்பனவாகும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

**வினாக்கள் :**

1. எழுத்து என்பது யாது ?
2. எழுத்தின் இருவகை வடிவங்கள் யாவை?
3. தமிழ் எழுத்துக்களின் பெயர்களை எழுதுக.
4. உயிர் எழுத்துக்கள் எத்தனை ? அவை யாவை ?
5. உயிர் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
6. குற்றெழுத்துக்கள் எத்தனை ? அவை யாவை ?
7. நெட்டெழுத்துக்கள் எத்தனை ? அவை யாவை ?

## 2. மெய் எழுத்து

மெய் எழுத்துக்கள் பதினெட்டு. அவை க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பன.

மெய் எழுத்துக்கள் உடம்பு (மெய்) போலத் தனித்து இயங்கும் ஆற்றல் அற்றவை. உடம்பு உயிரோடு கூடியே இயங்குவது போல, இவை உயிரெழுத்தோடு கூடியே ஒலிக்கும். ஆகையால் இவற்றை 'மெய் எழுத்துக்கள்' என்பர். இவற்றை 'ஒற்றெழுத்துக்கள்' எனவும் கூறுவர்.

### மூவின எழுத்துக்கள்

மெய் எழுத்துக்கள் மூன்று வகைப்படும். அவை வல்லினம், மெல்லினம், இடையினம் என்பன.

வலிய ஓசையுடைய எழுத்துக்கள் 'வல்லினம்' எனப்படும். மெல்லிய ஓசையுடைய எழுத்துக்கள் 'மெல்லினம்' எனப்படும். அவ்விரண்டிற்கும் இடைப்பட்ட ஓசையுடைய எழுத்துக்கள் 'இடையினம்' எனப்படும்.

1. க்,ச்,ட்,த்,ப்,ற் - இவை ஆறும் வல்லினம்.
2. ங்,ஞ்,ண்,ந்.ம்,ன் - இவை ஆறும் மெல்லினம்.
3. ய்,ர்,ல்,வ்,ழ்,ள் - இவை ஆறும் இடையினம்.

### வினாக்கள் :

1. மெய் எழுத்துக்கள் எத்தனை? அவை யாவை ?
2. மெய் எழுத்தின் வேறு பெயர் என்ன ?
3. மெய் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
4. வல்லின எழுத்துக்களை எழுதுக.
5. மெல்லின எழுத்துக்களை எழுதுக.
6. இடையின எழுத்துக்களை எழுதுக.

NOT TO BE REPUBLISHED @KTBS

# 5. நல்வழி

D4I3I1

## இருவகைப் பிரிவுகள்

1. சாதி இரண்டொழிய வேறில்லை ; சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர் ; இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி.

## இன்சொல்லை வன்சொல் வெல்லாது

2. வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல் பஞ்சில் பாயாது - நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

- ஔவையார்

@KTBS NOT TO BE REPUBLISHED

**ஆசிரியர் குறிப்பு :**

தமிழகத்தில் பல்வேறு காலங்களில் பல்வேறு பெண்பாற்புலவர்கள் ஔவையார் என்ற பெயரில் வாழ்ந்து பாடல்களும், நூல்களும் இயற்றியுள்ளனர். இவ்வற நூல்களைப் பாடியுள்ள ஔவையார் பிற்காலத்து (கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டு) ஔவையாராகக் கருதப்படுகிறார். இவரைப்பற்றிப் பல கதைகள் வழங்கப்படுகின்றன.

**நூற்குறிப்பு :**

பிற்காலத்து நீதிநூல்களை எழுதிய ஔவையார் என்னும் புலவர் சங்க காலத்து ஔவையாரினும் வேறுபட்டவர். இப்பிற்கால ஔவையார் நல்வழி, மூதுரை, கொன்றை

வேந்தன், ஆத்திசூடி முதலிய நீதி நூல்களை இயற்றியுள்ளார். இளம்பருவக் குழந்தைகட்குப் புரியும் வண்ணம் எளிய மொழியில் சிறந்த உவமைகளைப் பயன்படுத்தி அறக்கருத்துக்களைச் சுவைபடச் சொல்வது இவர்க்குக் கைவந்த கலை. இவர் இயற்றிய 'நல்வழி' என்ற அறநூல் கடவுள் வாழ்த்துப் பாடலோடு 41 பாடல்களைக் கொண்டது.

கருத்துரை :

1. வாழ்நெறிச் சட்டத்தில் உள்ளவாறு சாதிகள் இரண்டன்றி வேறில்லை; அறவழியிலிருந்து விலகாது நல்லொழுக்கத்தோடு கூடி உலகில் இரப்பார்க்கு ஒருபொருளை வழங்குபவர் மேற்குலத்தைச் சார்ந்தவர் ; அவ்வாறு வருந்தி வந்தவர்க்குப் பொருள் கொடாதவர் தாழ்ந்த குலத்தைச் சார்ந்தவர்.

2. வலிமை மிகுந்தவை மென்மையானவற்றை எல்லா நேரங்களிலும் வென்றுவிடும் என்று சொல்ல முடியாது. யானையின் உடலில் தைத்து உட்புகும் ஈட்டி மெத்தென்ற பஞ்சுக்குள் ஊடுருவ முடியாது ; அவ்வாறே, வலிய இரும்பினாலான பாரைக்குப் பிளக்காத பாறையானது இளம் செடியின் வேருக்கு இடம்கொடுத்துப் பிளவுபடும்.

அருஞ்சொற்பொருள் :

1. நெறி - ஒழுக்கம் ; மேதினி - உலகம் ; இட்டார் - பொருள் வழங்கியோர் ; பட்டாங்கு - நாம் வகுத்துக் கொண்ட மரபு நெறி.

2. வெட்டெனவை - வலிமையான பொருள்கள் ; மெத்தெனவை - மென்மையான பொருள்கள் ; வேழம் - யானை ; கோல் - ஈட்டி, வேல் ; பசுமரம் - இளம்செடி ; நெக்குவிடும் - தளர்ந்துவிடும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சி

சேர்த்தெழுதுக : இரண்டு + ஒழிய ; சாற்றும் + கால் ;
பட்டு + உருவும்.

பிரித்து எழுதுக : வேறில்லை ; நெட்டிருப்பு ; பசுமரம்.

வினாக்களுக்கு விடைதருக :

1. ஔவையார் கூறும் இரண்டு சாதியினரை எழுதுக.
2. வலிமைவாய்ந்த பொருட்கள் எளியனவற்றை வெல்லமாட்டா என்பதற்கு ஆசிரியர் கூறும் உவமை யாது ?
3. கடப்பாரைக்கு உடையாத பாறை இளஞ்செடியின் வேருக்குப் பிளவுபடும் என்ற உவமை எக்கருத்தை விளக்க வந்தது ?

@KTBS NOT TO BE REPUBLISHED

# 6. புலவரும் கஞ்சனும்

தில்லி நகரின் முக்கியமான ஒரு தெருவில் அகர்வால் என்னும் பெரிய பணக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் கஞ்சனுக்குக் கஞ்சன் ; வடிகட்டிய கஞ்சன் ; உயிரே போனாலும் கூடப் பிறருக்கு ஒரு சல்லிக்காசு கூடக் கொடுக்கமாட்டான். ஒருவேளை சமையல் செய்து அதையே மூன்று வேளை சாப்பிடுவான். எப்பொழுதும் ஒரே உடையைத்தான் உடுத்துவான். அழுக்குப் போகச் சவுக்காரம் போட்டுத் துவைத்தாலும் துணி கிழிந்து விடும் என்று துவைக்காமலேயே உடுத்திக் கொள்வான்.

மாளிகை போன்ற வீட்டைப் பராமரிக்க வேலையாட்கள் வைத்தால் பணம் செலவாகி விடுமே என நினைத்து, எல்லா அறைகளையும் பூட்டிவிட்டு ஒரு சிறிய அறையில் மட்டும் வாழ்வான்.

ஒரு நாள் கன்னட நாட்டிலிருந்து விஷ்ணுவர்த்தனர் என்னும் புகழ்வாய்ந்த புலவர் தில்லிக்கு வந்திருந்தவர், அந்தக் கஞ்சன் வீட்டு வழியாகச் சென்றார். அத்தெருவில் கஞ்சனின் வீடு பெரிய மாளிகையாக இருந்தமையால், ''இந்த வீட்டுச் செல்வந்தரைப் புகழ்ந்து பாடல் பாடினால் பெரிய பரிசு கிடைக்கும்'' என நினைத்துக் கஞ்சன் வீட்டில் நுழைந்தார் புலவர் விஷ்ணு வர்த்தனர்.

புலவர் தம்மைக் கஞ்சனிடம் அறிமுகப் படுத்திக் கொண்டு, அவனைப் புகழ்ந்து பாடல்கள் பாடி வாழ்த்தினார். பாடல்களைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தான் கஞ்சன். ஆனால், புலவருக்கு எவ்விதப் பரிசும் அளிக்கவில்லை. புலவருக்குப் பரிசளிக்காமல் எவ்வாறு வெளியேற்றுவது என்று எண்ணிய கஞ்சன் ''புலவரே தங்களின் பாடல்களைக்

NOT TO BE REPUBLISHED @KTBS

கேட்டு என் உள்ளம் மகிழ்ச்சி அடைந்தது. தங்களுக்குப் பரிசு அளிக்க வேண்டியது எனது கடமை. தாங்கள் நாளை வந்தால் என்னால் இயன்றளவு பரிசு தருகிறேன்'' என்றான் கஞ்சன்.



கஞ்சன் அகர்வாலின் சொற்படியே சென்று, மறுநாள் புலவர் விஷ்ணு வர்த்தனர் அவன் மாளிகைக்கு வந்தார். கஞ்சன் புலவர் வந்ததைக் கண்டும் காணாமலும் அங்கு வந்திருந்த நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தான் பல மணி நேரம் கடந்தும் கவனியாதது போல இருந்தான்.

சிறிதும் கலக்கமடையாமல் புலவர், கஞ்சனிடம்சென்று, ''ஐயா தங்களின் சொல்படி வந்துள்ளேன் ; மறந்து விட்டீர்களா?'' என்று நினைவு படுத்தினார். கஞ்சன் மறந்து விட்டவன் போன்று ''ஓ..... தாங்கள் புலவரா ? நேற்றைய நிகழ்ச்சியை மறந்து விட்டேன். இப்பொழுது நண்பரிடம் மிகவும் முக்கியமாகப் பேச வேண்டியிருப்பதால் இப்பொழுது எதுவும் செய்ய முடியாது. ஆகையினால் தாங்கள் நாளை வாருங்கள் ; பரிசு தருகிறேன்'' என்றான் கஞ்சன். மனம் தளராமல் மறு நாளும் அகர்வால் வீட்டிற்குச் சென்றார் புலவர். புலவரைக் கண்டதும் கஞ்சனுக்குக் கோபம், கோபமாக வந்தது.

© KTBS NOT TO BE REPUBLISHED

''என்னைப் புகழ்ந்து பாடியதற்கு ஏதாவது பரிசு தருகிறேன் என்று சொன்னதற்கு நாள்தோறும் வந்து தொந்தரவு தரலாமா? தருகிறேன் என்று சொன்னால் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று கட்டாயம் ஏதாவது உள்ளதா ? பரிசு எதுவும் தர முடியாது. இனி இங்கு வந்து எனக்குத் தொந்தரவு கொடுக்காதீர்கள்'' என்றான் கஞ்சன்.

புலவர் மனச் சஞ்சலத்துடன் திரும்பி விட்டார். அடுத்த நாள் பீர்பாலைச் சந்திக்கச் சென்றார் புலவர். விஷ்ணு வர்த்தனரின் புகழைக் கேள்விப்பட்ட பீர்பால் அவரை எதிர் கொண்டு அழைத்து மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தார். பேச்சினிடையில் புலவர் கஞ்சன் அகர்வாலைப் பற்றிக் கூறினார். பீர்பால் கஞ்சனுக்குச் சரியான பாடம் புகட்டுவதாகக் கூறினார். மேலும், ''தாங்கள் அவனது இல்லத்திற்குச் சென்று ''இன்று இரவு பீர்பால் அவர்கள் வீட்டில் விருந்திற்கு ஏற்பாடு செய்துள்ளார். தங்களைச் சிறப்பு விருந்தினராக அழைப்பதாகக் கூறுங்கள்'' என்றார்.

புலவர் மறுநாள் கஞ்சன் வீட்டிற்குச் சென்று பீர்பால் விருந்துக்கு அழைத்த செய்தியைக் கூறினார். கஞ்சன் மிகவும் மகிழ்ச்சியடைந்து காலையிலிருந்து எதுவும் சாப்பிடாமல் பசியோடு பீர்பால் வீட்டிற்குச் சென்றான். கஞ்சன் வருவதற்கு முன்பே பீர்பாலும் புலவரும் சாப்பிட்டு விட்டுக் கஞ்சனின் வரவிற்காகக் காத்திருந்தனர். கஞ்சன் பீர்பாலின் வீட்டுக்கு வந்தான். பீர்பலும் புலவரும் கஞ்சனைப் பொருட் படுத்தாமல் பேசிக் கொண்டிருந்தனர். அவனைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. பொறுமை இழந்தான் கஞ்சன். மேலும், அங்கு விருந்து நடப்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை. கஞ்சன் பொறுமையிழந்து பீர்பலிடம் ''பீர்பல் அவர்களே! இன்று என்னை விருந்துக்கு அழைத்து விட்டு, என்னை வரவேற்கவும் இல்லை ; நீங்கள் இருவரும் பேசிக் கொண்டே

@KTBS NOT TO BE REPUBLISHED

இருந்தால் எப்படி ? எப்போது விருந்துண்ண ஏற்பாடு செய்யப் போகிறீர்கள் ?'' என்றான். ''இது என்ன பெரிய தொல்லையாகி விட்டதே ! ஏதோ ஒரு பேச்சுக்கு விருந்துக்கு அழைத்தால் அதை நம்பிப் புறப்பட்டு வந்து விடுவதா ? விருந்துண்ண அழைத்தால் விருந்து வைக்கவேண்டும் என்று கட்டாயமா ? விவரம் தெரியாதவராக இருக்கிறீர்களே!'' என்றார் பீர்பல் கடுமையாக.



தன்னை ஏன் ஏமாற்றினார்கள் என்று எண்ணிப் பார்த்த கஞ்சனுக்கு அப்போது தான் புலப்பட்டது காரணம் தான் புலவருக்குப் பரிசு தருவதாகக் கூறிப் பல தடவை வரச் செய்து கடுமையாகப் பேசி ஏமாற்றி அவமானப் படுத்தியதற்கு, பீர்பல், தமக்குப் பாடம் புகட்டியுள்ளார் என்பதை உணர்ந்து கொண்டான்.

கஞ்சன் தன் தவற்றினை உணர்ந்து புலவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு புலவருக்குத் தன் விரலில் அணிந்திருந்த மோதிரத்தைப் பரிசாக அளித்தான். பீர்பல் அகர்வாலுக்கு விருந்தளித்து மன மகிழ்வுடன் அனுப்பி வைத்தார். அகர்வாலும் புது மனிதனாக வீடு வந்துசேர்ந்தான்.

அருஞ் சொற்பொருள் :

மனம் - உள்ளம் ; கருமி - கஞ்சன் ; பராமரிப்பு - பாதுகாத்தல் ; பணக்காரர் - செல்வந்தர் ; தோழன் - நண்பன் சினம் - கோபம் ; இல்லம் - வீடு ; பொறுமை - நிதானம்.

### பயிற்சி

**I.** சேர்த்தெழுதுக :

அ
1) சல்லி + காசு = .............
2) வெளி + ஏறுவது = .............
3) என்று + எண்ணி = .............
4) கலக்கம் + அடையாமல் = .............
5) மகிழ்ச்சி + அடைந்து = .............

**II.** பிரித்தெழுதுக :

1) மனமகிழ்ந்து = ............. + .............
2) மன்னிப்புக் கேட்டு = ............. + .............
3) தொல்லையாக = ............. + .............
4) இயன்றளவு = ............. + .............
5) விருந்துண்ணுதல் = ............. + .............

**III.** எதிர்ச் சொல் தருக :

1) ஏழை × .............
2) பெரிய × .............
3) தவறு × .............
4) மகிழ்ச்சி × .............
5) நேற்று × .............

@KTBS NOT TO BE REPUBLISHED

**IV.** சொந்தத் தொடர்களில் எழுதுக :

1) பெரிய பணக்காரன்

2) ''இது என்ன பெரிய தொல்லையாகப் போய் விட்டதே!''

3) புகழ் வாய்ந்த புலவர்

4) ''பரிசு தருகிறேன்''

**V.** ஒரு தொடரில் விடை தருக :

1) இப் பாடத்தில் தில்லி நகரின் முக்கியமான ஒரு தெருவில் வசித்தவரின் பெயர் என்ன ?

2) விஷ்ணு வர்த்தனர் எந்த நாட்டிலிருந்து தில்லிக்கு வந்தார் ?

3) கஞ்சன் புலவரிடம் நாளைக்குவா என்று எதற்காகச் சொன்னார் ?

4) பீர்பால் வீட்டிற்குக் கஞ்சன் எப்படிச் சென்றான் ?

5) ''இது என்ன பெரிய தொல்லையாகப் போய் விட்டதே'' என்று பீர்பால் எதற்காகச் சொன்னார் ?

**VI.** இரண்டு அல்லது மூன்று தொடரில் விடை தருக :

1) கஞ்சனின் குண நலனை விளக்குக.

2) கஞ்சன் தன் வீட்டை எப்படி வைத்திருந்தான் ? ஏன்? விளக்குக.

3) விஷ்ணு வர்த்தனர் எந்த எண்ணத்துடன் கஞ்சன் வீட்டிற்குச் சென்றார் ?

4) பீர்பால் கஞ்சனுக்கு எவ்விதம் அறிவு புகட்டினார் ?

NOT TO BE REPUBLISHED @KTBS

**VIII.** நான்கு அல்லது ஐந்து தொடர்களில் விடை தருக :

1) இக் கதையின் மூலம் அறிவுறுத்தப்படும் கருத்து யாது ? விளக்குக.

2) பீர்பாலும் விஷ்ணுவர்த்தரும் கஞ்சனுக்கு எப்படி அறிவு புகட்டினார்கள் ? விளக்குக.

**I.** சரியான சொற்களை நிரப்பி எழுதுக :

1) மதம், இனம் ............ வேறு பட்டாலும் நாம் அனைவரும் .............

2) கன்னட நாட்டில் ............. ஆறு ஓடுகிறது.

3) உயிரே போனாலும் பிறர்க்கு ஒரு ............

4) இந்தியாவின் வாசல் ................ மாநிலத்தில் உள்ளது.

5) கஞ்சனின் வீடு பெரிய ................ இருந்தது.

6) கஞ்சன் காலையிலிருந்து எதுவும் சாப்பிடாமல் ............ இருந்தான்

**II.** சரியா ! தவறா ! எழுதுக :

1) கருமையான மேகம் மழை தரும்.

2) யானை நின்று கொண்டே தூங்கும்.

3) பெங்குவின் பறவை நன்றாகப் பறக்கும்.

4) சூரியன் செல்லும் பாதையிலேயே சூரிய காந்திப் பூ செல்லும்.

5) குயில் காக்கைக் கூட்டில் முட்டை இடும்.

6) கோழி கூவும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

7) இரயில் தண்டவாளத்தில் செல்லும்.

8) ஆண் மயிலுக்குத் தோகை உண்டு.

9) மழைநீர் உப்பாக இருக்கும்.

10) மாட்டு வண்டி அதி வேகமாகச் செல்லும்.

**III.** பொருத்துக :

1) சிலப்பதிகாரம் - கம்பர்

2) திருக்குறள் - தொல்காப்பியர்

3) இராமாயணம் - இளங்கோவடிகள்

4) தொல்காப்பியம் - திருவள்ளுவர்

**IV. பின்வரும் கட்டங்களில் மறைந்துள்ள பெயர்ச்சொற்களை எடுத்து எழுதுக :**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ம | ழை | அ | நி | சா | ம | ய | ரு |
| ப் | ரு | க | ம | லா | லி | க | நே | |
| து | ர | வ | சா | பா | ர | தி | யா | ர் |
| ல் | வி | வே | கா | ன | ந் | த | ர் | சி |
| க | உ | சி | கு | யி | ல் | ர | உ | இ |
| லா | வெ | ளி | ச் | ச | ம் | வ | க | ரு |
| ம் | ட் | ல | ப | ரு | தி | ய | த | ட் |
| யா | ய | சர் | சி | வி | ரா | ம | ன் | டு |
| வ | லி | கோ | மா | ன் | த | ள | று | அ |
| ம | ர | லி | ய் | ள | ச | மி | இ | ஒ |
| மா | ளி | ல் | தா | கா | ற் | று | ழ | லி |
| ஒ | ளை | செ | க | ன் | ன | ட | ம் | சி |

**படித்துப் பழகுக :**

''இது என்ன பெரிய தொல்லையாகப் போய் விட்டதே ! ஏதோ பேச்சுக்கு விருந்துக்கு அழைத்தால் அதனை நம்பிப் புறப்பட்டு வந்து விடுவதா ?''

NOT TO BE REPUBLISHED ©KTBS

## II. இலக்கணம்

### 3. உயிர்மெய் எழுத்து

உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் எழுத்து உயிர்மெய் எழுத்து எனப்படும். (எ-டு) க் + அ = க

உயிர்மெய் எழுத்துக்கள் இருநூற்றுப் பதினாறு. பதினெட்டு மெய் எழுத்துக்களுடன் பன்னிரண்டு உயிர் எழுத்துக்கள் தனித்தனியே சேர மொத்தம் இருநூற்றுப் பதினாறு (18 X12 = 216) உயிர்மெய் எழுத்துக்கள் தோன்றும்.

(எ-டு) க, கா, கி,கீ,கு,கூ, கெ,கே,கை,கொ,கோ,கௌ என வரும்.

### 4. ஆய்த எழுத்து

மூன்று புள்ளி (ஃ) வடிவாக எழுதப்படும் எழுத்து ஆய்த எழுத்து எனப்படும். இதனைத் 'தனிநிலை' எனவும் கூறுவர். இது குறிலுக்கும் வல்லின உயிர்மெய்க்கும் நடுவில் வரும்.

(எ-டு) = அஃது, எஃகு, அஃறிணை.

தமிழ் மொழியில் உள்ள மொத்த எழுத்துக்கள் இருநூற்று நாற்பத்தேழு ஆகும். அவை வருமாறு :

| | | |
|---|---|---|
| உயிர் | - | 12 |
| மெய் | - | 18 |
| உயிர்மெய் | - | 216 |
| ஆய்தம் | - | 1 |
| மொத்தம் | | 247 |

NOT TO BE REPUBLISHED @KTBS

# 7. பல்சுவை

F4A7G9

## 1. இயற்கை விருந்து

தென்னைதான் ஊஞ்சல், விண்தான் திருவுலா வீதி, வாரித்
தின்னத்தான் பழங்கொட் டைகள், திருநாடு வையம் போலும்!
புன்னைக்காய்த் தலையிற் செம்மைப் புதுமுடி புனைந்தி
ருப்பாய்,
உன்னைத்தான் காணு கின்றேன் ; கிள்ளாய்நீ ஆட்சி உள்ளாய்!

- பாரதிதாசன்

**ஆசிரியர் குறிப்பு :**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் 1891-இல் புதுவையில் பிறந்தவர். இவரது இயற்பெயர் சுப்புரத்தினம். இளமையிலேயே தமிழறிவும், மொழிப்பற்றும் மிக்குடையராய் விளங்கினார். பதினெட்டு வயதில் தமிழாசிரியர் பணி ஏற்றார். பாரதியாரிடம் பல்லாண்டுகள் நெருங்கிப் பழகியவர். தமிழ்க் கவிஞர் உலகில் சிறந்த இடம்பெற்று இன்று 'பாவேந்தர்' என்று பாராட்டப்படுகின்றார்.

**நூல் குறிப்பு :**

இவர்தம் கவிதைகள் ஆறு தொகுதிகளுக்கும் மேலாக வெளிவந்துள்ளன. இவர் இயற்றிய நூல்களில் குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு முதலிய நூல்கள் எல்லோராலும் பாராட்டப்பட்டு வருகின்றன. இயற்கையில் அழகைக் காணுங்கள் என்று அறிவுறுத்தும் வண்ணம் இவர் பாடிய 'அழகின் சிரிப்பு' என்ற நூலில் 'கிளி' என்ற தலைப்பில் அமைந்த பத்துப் பாடல்களில் ஒன்று இங்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

@KTBS NOT TO BE REPUBLISHED

அருஞ்சொற்பொருள் : விண் - ஆகாயம் ; வையம் - உலகம் ; முடி - கிரீடம் ; ஆட்சி உள்ளாய் - அரசு புரிகின்றாய்.

கருத்துரை :

தென்னை மரம்தான் உனக்கு ஊஞ்சல் ; பரந்த வானம் தான் நீ உலாச் செல்கின்ற திருவீதி ; நீ அள்ளித் தின்பதற்கு பழுத்த பழங்களும் கொட்டைகளும் இயற்கையாக உனக்குக் கிடைக்கின்றன. இந்த உலகமே நீ ஆளுகின்ற நாடு. புன்னையின் காய்போன்ற பச்சைநிறத் தலையின் உச்சியில் காணப்படும் செந்நிறம் நீ புதிய பொன்முடி அணிந்திருப்பதுபோல் தோன்றுகிறது. எங்குப் பார்த்தாலும் நான் உன்னைத்தான் காணுகின்றேன். கிளியே! அரச பதவியில் அமர்ந்து நீ ஆட்சிபுரிகின்றாய் !

## பயிற்சி

சேர்த்து எழுதுக : திரு + உலா ; புனைந்து + இருப்பாய் ;

பிரித்து எழுதுக : புன்னைக் காய் ; உன்னைத்தான்.

வினாவிற்கு விடைதருக :

1. கிளியினது அரச பதவியின் கோலாகலத்தைப் பாவேந்தர் எவ்வாறு புனைந்துரைக்கின்றார் ?

செய்முறை : புறாவைப் பற்றிய பாரதிதாசன் பாடிய ‘அழகின் சிரிப்பு’ பாடல்களை ஆசிரியர்வாய்க் கேட்டறிக.

@KTBS
NOT TO BE REPUBLISHED

# 8. கித்தூர் ராணி சென்னம்மா



இந்திய விடுதலைப் போராட்டத்தின் முதல் போராட்டம் கருநாடகத்தில் தான் நடந்தது. அதுவும் இந்தியப் பெண்களின் வீரத்தை விளக்கும் வகையில். 1857 - ஆம் ஆண்டுதான் இந்திய சுதந்திரப் போராட்டம் தொடங்கியதாக வடநாட்டு வரலாற்று ஆய்வாளர்கள் கணக்கிடுகிறார்கள். ஆனால் அதற்கு 30 ஆண்டுகளுக்கு முன்பே தென் மாநிலங்களில் குறிப்பாகக் கருநாடகத்தின் வட பகுதியில் கித்தூர் சிற்றரசின் ராணி சென்னம்மா ஆங்கிலேயருக்கு எதிராக வாள் ஏந்திப் போராடினார்.

கித்தூரைத் தலைநகராகக் கொண்ட இந்தப் பகுதியை ஆண்டு வந்த மன்னர்களில் ஆற்றல் மிக்கவர் பதினோராவது தேசாயியான சிவலிங்க ருத்திரன். இவருக்கு ருத்திராம்பா, சென்னம்மா என்னும் மனைவியர் இருவர் இருந்தனர்.

@KTBS NOT TO BE REPUBLISHED

இளையவளான சென்னம்மா காகதீய இனத்தைச் சார்ந்தவள். கூரிய மதிவன்மையும், அரசியல் அறிவும், போர்த்திறமும் மிக்கவள். இவளே (கம்பனிஆட்சி) ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் போராடிய முதல் கன்னட வீராங்கனை.

கித்தூர் சிவலிங்க ருத்திரனுக்கும் சென்னம்மாவுக்கும் குழந்தைகள் இல்லை. அவர்கள் ஒரு சிறுவனைத் தத்து எடுத்தனர். ஆனால் இதை ஆங்கிலேயர்கள் ஏற்கவில்லை. இதைக் கேட்டுச் சிவலிங்க ருத்ரா வெகுண்டு எழுந்தார். ''எங்கள் நாட்டை நாங்கள் ஆள்கிறோம். அதை ஆட்சி செய்ய நாங்கள் ஒரு குழந்தையைத் தேர்ந்து எடுக்கிறோம். இதில் ஆங்கிலேயர்கள் ஏன் மூக்கை நுழைக்க வேண்டும்'' என்று அவர் கேள்வி எழுப்பினார். ஆங்கிலேயர்களைக் குறித்து கவலை இல்லாமல் ஆட்சி நடத்தினார்.

ஆனால் சிறிது காலத்தில் அவர் நோய் காரணமாக அகால மரணம் அடைந்தார். அதன் பிறகு ராணி சென்னம்மா ஆட்சிப் பொறுப்பேற்றார். சிவலிங்க ருத்ரா இருந்தவரை வாலைச் சுருட்டிக் கொண்டு இருந்த வெள்ளையர்கள் ராணி சென்னம்மா பதவிக்கு வந்ததும் மீண்டும் மீசையை முறுக்கினார்கள். தார்வாரில் இருந்த ஆங்கில கலெக்டர் கித்தூர் சிற்றரசின் ராணியாகச் சென்னம்மாவை ஏற்க மறுத்தார்.

பம்பாய்க்குக் கடிதம் எழுதிக் கித்தூர் சிற்றரசை ஆங்கில அரசுக்கு அடிமையாக்கும்படி கூறினார். இதைக் கேட்டு ஆத்திரம் அடைந்த ராணி சென்னம்மா தார்வார் மீது படை எடுத்துச் சென்றார். தானே குதிரையில் ஏறி வாளைச் சுழற்றியபடி படை நடத்திச் சென்ற சென்னம்மா தார்வார் கலெக்டர் தாக்கரேயையும் அவருக்கு உதவியாக இருந்த ராணுவ அதிகாரிகளையும் வெட்டிக் கொன்றார். இரண்டு அதிகாரிகளைச் சிறை பிடித்தார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

சென்னம்மாவின் இந்தப் புலிப் பாய்ச்சல் போர் குறித்துக் கவிஞர் மகுந்திபசவா சிறப்பான காவியம் ஒன்றை எழுதி இருக்கிறார். இந்தப் போரில் தோல்வி அடைந்த ஆங்கில அரசாங்கம் தொடர்ந்து மீண்டும் முழு பலத்துடன் கித்தூர் கோட்டையைத் தாக்கி அழித்தது.

''பரம்பரை பரம்பரையாக ஆண்டுவரும் எங்கட்கு வாணிகத்திற்கு வந்தவன் வழிகாட்டுவதா ? முடியாதென்று சொல். பாம்பை மிதித்தவன் அமைதியாக அடுத்த அடியை எடுத்து வைக்க இயலாதென்றும் அறிவி, போ'' என்று கூறி அனுப்பிய பின் ''வீரர்களே, தூங்கும் புலியை உசுப்பி விட்டவன்போல, உங்கள் வீரத்தை மதியாத அந்நியர்க்குப் பாடங்கற்பிக்க வேண்டும். என்ன சொல்கிறீர்கள் ?'' என்றாள்.

''அப்படியே ! ஆகட்டும்'' என்ற வீரர்களது ஆரவாரம் வானைப் பிளந்தது.

''வீரர்களே ! உங்கள் தாயை உங்கள் கண்ணெதிரே அந்நியன் மடிபிடித்திழுக்க முனைந்து விட்டான். இனி என்ன செய்யப் போகிறீர்கள்.'' என்றாள்.

''அது இயலாது! அந்நியன் தொட விடோம், இது சத்தியம்.'' என்றார்கள் வீரர்கள்.

''வீரர்களே ! உங்கள் வீரத்தில் எனக்கு நம்பிக்கையுண்டு. இனிநாம் சிந்தப்போகும் ஒவ்வொரு துளிரத்தமும் நமது புகழைக் கூறும்.''

வருங்கால சமுதாயம் உங்களை வாழ்த்தும். இது நிச்சயம்.

வீரர்களே ! எழுக ! கன்னடத்தாய் உங்களுக்கு வெற்றி தருவாள். வாழ்க உங்கள்வீரம்.''

கித்தூர் வீரர்கள் மூன்று நாட்கள் தொடர்ந்து வீராவேசமாகப் போர் நிகழ்த்தினார்கள். இறுதியில் ஆங்கில

NOT TO BE REPUBLISHED @KTBS

ராணுவம் கித்தூர் கோட்டையைத் தகர்த்தது. ராணி சென்னம்மாவையும் அவருக்கு உதவியாக இருந்த வீரவ்வா, ஜானகிபாய் ஆகியோரையும் ஆங்கில ராணுவம் 1824 - ஆம் ஆண்டு கைது செய்தது.

பயல ஹொங்கல என்ற இடத்தில் சென்னம்மா சிறை வைக்கப்பட்டார். 1829-ம் ஆண்டு பிப்ரவரி இரண்டாம் நாளன்று உடல் நலம் இல்லாமல் ராணி சென்னம்மா இந்த உலகைவிட்டு மறைந்தார். இராணுவ மரியாதைகளுடன் அவருடல் அடக்கம் செய்யப்பட்டது. சென்னம்மாவால் ஊட்டப்பட்ட சுதந்திர எழுச்சிக்கனல் உடனடியாக அணைந்து விடவில்லை.

முதல் சுதந்திரப் போரின் எழுச்சி அதோடு அடங்கியது. என்றாலும் சென்னம்மாவின் வீரம் இன்னமும் நினைவுகூரப்படுகிறது. கருநாடக அரசு ராணி சென்னம்மாவுக்கு பெங்களூர் டவுன் ஹால் அருகில் சிலை வைத்துச் சிறப்பித்து உள்ளது.

| |
|---|
| கித்தூர் ராணி சென்னம்மா அரசாட்சி செய்த கோட்டை கித்தூரில் உள்ளது. ஊப்ளியில் இருந்து பெல்காம் செல்லும் வழியில் 45 கி.மீ. தூரத்தில் உள்ளது. |

அருஞ்சொற்பொருள் :

விடுதலை - சுதந்திரம், வீராங்கனை - வீரப்பெண்மணி, வாணிகம் - வியாபாரம், உசுப்பி - எழுப்பி, சத்தியம் - உண்மை, புவனம் - உலகம், மதி - அறிவு, தத்து - பிறருடைய பிள்ளையைத் தன்னுடைய பிள்ளையாக முறைப்படி எடுத்துக் கொள்ளுதல். ஆளுமை - ஆட்சி, கலெக்டர் - மாவட்ட ஆட்சியர், மிகுதி - அதிகமாக, பரம்பரை - வழிவழியாக, அந்நியன் - வேற்று நாட்டான், எழுச்சிக்கனல் - புரட்சிநெருப்பு, தொலைவு - தூரம், வழி - பாதை

NOT TO BE REPUBLISHED @KTBS

## பயிற்சி

**I.** சேர்த்தெழுதுக :

1) வரும் + காலம் = .............
2) காட்டி + கொடுத்தனர் = .............
3) அவர் + உடல் = .............
4) வெட்டி + கொன்றார் = .............
5) பொறுப்பு + ஏற்றார் = .............

**II.** பிரித்தெழுதுக :

1) சுதந்திரப்போர் = ............. + .............
2) நம்பிக்கையுண்டு = ............. + .............
3) கன்னடத்தாய் = ............. + .............
4) புலிப்பாய்ச்சல் = ............. + .............
5) கண்ணெதிரே = ............. + .............
6) பிடித்திழுக்க = ............. + .............
7) கணக்கிடுகிறார்கள் = ............. + .............

**III.** எதிர்ச் சொல் தருக :

1) முன்பு × .............
2) முதியவள் × .............
3) மகிழ்ச்சி × .............
4) சிற்றரசு × .............
5) விடுதலை × .............
6) ஆரவாரம் × .............
7) வெற்றி × .............
8) அருகில் × .............

NOT TO BE REPUBLISHED ©KTBS

**IV. ஓரிரு தொடர்களில் விடைதருக :**

1) கருநாடகத்தின் வடபகுதியில் உள்ள கித்தூர் சிற்றரசின் ராணியின் பெயர் என்ன ?

2) கித்தூரைத் தலைநகராகக்கொண்ட பதினோராவது மன்னரின் பெயர் என்ன ?

3) கித்தூர் அரசர் சிவலிங்கருத்திரர் எவ்வாறு காலமானார் ?

4) ராணி சென்னம்மா தார்வார் கலெக்டரையும் உதவி ராணுவ அதிகாரியையும் எப்படிக் கொன்றார் ?

5) மகுந்திபசவா சிறப்பான காவியம் யாருக்காக எழுதினார் ?

6) தூங்கும் புலியை உசுப்பி விட்டவன் என்று யாரைக் கூறினார் ?

**V. இரண்டு அல்லது மூன்று தொடர்களில் விடை தருக :**

1) இந்திய விடுதலைப் போராட்டம் முதலில் எங்கு நடந்தது ?

2) கர்நாடகத்தில் ஆங்கிலேயரை எதிர்த்த ராணி சென்னம்மா எவ்வாறு போராடினார் ?

3) ராணி சென்னம்மாவின் குணநலனை எழுதுக.

4) யாரை அடிமையாக்க கலெக்டர் பம்பாய்க்குக் கடிதம் எழுதினார் ?

5) ராணி சென்னம்மா பேசிய வீரவசனங்கள் யாவை ?

**VI. மூன்று அல்லது நான்கு வாக்கியங்களில் விடையளிக்க :**

1) முதல் கன்னட வீராங்கனையின் குணநலனை விளக்குக.

2) வீரர்களைப் பார்த்து ராணிசென்னம்மா கூறியவை யாவை ?

© KTBS
NOT TO BE REPUBLISHED

**VII.** கோடிட்ட இடங்களை நிரப்புக :

1) சிவலிங்கருத்ராவுக்கு ருத்திரம்மாள் ............ என்னும் மனைவியர் இருவர் இருந்தனர்.

2) ராணி சென்னம்மா கூரிய மதிவன்மையும் ............ போர்த்திறமும் மிக்கவள்.

3) கன்னடத்தாய் உங்களுக்கு ............ தருவாள்.

4) வீரவ்வா, ஜானகிபாய் ஆகியோரை ஆங்கில ராணுவம் .............. ஆம் ஆண்டுகைது செய்தது.

5) சென்னம்மாவால் ஊட்டப்பட்ட சுதந்திர ............. உடனடியாக அணைந்து விடவில்லை.

**VIII.** மறைந்துள்ள வீரர்கள் மற்றும் ஊர்களின் பெயர்களை எழுதுக :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பா | ர | ஜா | ன | கி | பா | ய் | சு | கி | ரா |
| வீ | ஞ | செ | சு | ஊ | ப் | ளி | அ | த் | பா |
| ர | க | ன் | ன | ட | ம் | உ | ரு | து | பெ |
| வ் | ந | ன | ஜ | ய | சி | க | த் | ர் | ல் |
| வா | ல | ம் | ங | ல | ங் | தை | தி | வா | கா |
| ர | வ | மா | வி | லி | ந் | வு | ர | ர் | ம் |
| வ | ழ | | வ | ழ | பி | ட | ம் | தா | தெ |
| ழ | ள | சி | கு | ஊ | ல | ஙீ | மா | ள | ா |

செய்முறை : ஜான்சிராணி லட்சுமிபாய் அவர்களை பற்றிய செய்திகளைப் பெரியோர்களிடம் கேட்டுக்கட்டுரை வடிவில் எழுதுக.

NOT TO BE REPUBLISHED @KTBS

# III. இலக்கணம்

## ஆ. சொல்

எழுத்து தனித்து நின்றோ தொடர்ந்து நின்றோ பொருள் தந்தால் சொல் எனப்படும்.

ஓர் எழுத்தாலான சொற்கள் ''ஓரெழுத்தொரு மொழி'' எனப் பெயர் பெறும்.

இரண்டு மூன்று முதலிய எழுத்துக்களாலான சொற்கள் ''தொடர் மொழி'' எனப்படும்.

(எ-டு) ஈ, பூ, கை, வா - ஓரெழுத்துச் சொற்கள்

பசு, மலை, ஆணி
அறம், பள்ளம், பரிசு } - இரண்டு முதலான எழுத்துக்களான தொடர் மொழிகள்

NOT TO BE REPUBLISHED @KTBS

### சொல்லின் வகை

சொற்கள் இலக்கிய வகையில் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகைப்படும்.

### 1. இயற்சொல்

எல்லோர்க்கும் பொருள் விளங்கும் தன்மையுடைய எளிய சொல் இயற்சொல் எனப்படும்.

(எ-டு) மண், பொன், மரம், அழகு

### 2. திரிசொல்

கற்றோர்க்கு மட்டும் பொருள் விளங்கும் அருஞ்சொல் திரிசொல் எனப்படும்.

அது 'ஒரு பொருள் குறித்த பல சொல்' எனவும் 'பலபொருள் குறித்த ஒரு சொல்' எனவும் இரு வகைப்படும்.

(எ-டு) கிள்ளை, தத்தை, சுகம் என்பன 'கிளி' என்னும் ஒரு பொருள் குறித்த பல சொல்.

வேழம் என்பது 'கரும்பு', மூங்கில், யானை முதலிய பல பொருள் குறித்த ஒரு சொல்.

**வினாக்கள்**

1. சொல் என்றால் என்ன ?
2. சொல் இலக்கிய வகையில் எத்தனை வகைப்படும் ?
3. ஓரெழுத்தொரு மொழி நான்கை எழுதுக.
4. இயற்சொல் என்பது யாது ? எடுத்துக்காட்டுத் தருக.
5. திரிசொல் என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும் ?

@KTBS
NOT TO BE REPUBLISHED

# 9. சிற்றிலக்கியம்

Q5B2Z9

## காந்தி பிள்ளைத் தமிழ்

சாந்தம் என்னும் பெருங்கடலில்
சத்யம் என்னும் தூண்நாட்டித்
தகைசால் பொறையை மத்தாக்கித்
தருமம் என்னும் நாண்போக்கி

வாய்ந்த அவற்றின் இருமருங்கும்
மல்லல் மிக்க இந்துமுசல்
மான்கள் என்னும் இருவேறு
மதத்து ளாரும் வலிந்திழுக்க

ஈந்த பயனாய் எழுந்தபெரும்
இன்பம் என்னும் ஆரமுதை
இறைமால் போல இவ்வுலகில்
எல்லா உயிரும் உய அருளிக்

காந்தம் எனவே அன்பிழுக்கும்
காந்தி வருக வருகவே !
கருத்திற் கிசைந்த கத்தூரி
கணவா வருக வருகவே !

- தமிழ்க் கடல் ராய சொக்கலிங்கனார்

©KTBS NOT TO BE REPUBLISHED

நூற்குறிப்பு : பிள்ளைத்தமிழ் தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. கடவுளரையும் மக்களுட் சிறந்த பெரியாரையும் குழந்தைப் பருவத்தினராகக் கொண்டு அவர்தம் சிறப்பியல்புகளனைத்தும் வெளிப்படக் கவிஞர் பாடுவது இது. ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இது இருவகைப்படும். பத்துப் பருவங்களை உடையது. ஒவ்வொரு பருவத்திலும் பத்துப்பாடல்களைக் கொண்டது.

காந்திக் கவிதை என்னும் தொகுப்பு நூலில் காந்திபிள்ளைத் தமிழ் என்ற பகுதி உள்ளது. காந்தி அடிகளைக் குழந்தையாகக் கொண்டு பாடப்பட்டதாகலின் இது காந்தி பிள்ளைத்தமிழ் எனப்பட்டது.

ஆசிரியர் குறிப்பு : இந்நூலாசிரியர் 'தமிழ்க்கடல்' ராய. சொக்கலிங்கனார் ஆவர். காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ் ஆராய்ச்சித்துறை இயக்குநராகப் பணியாற்றியவர். 'கம்பனும் சிவனும்', 'வில்லியும் சிவனும்' முதலியன இவர் இயற்றிய வேறு நூல்கள். இந்திய விடுதலைப் போராட்டத்தில் சிறைசென்ற இவர் சிறையிலிருந்து காந்தி அடிகளின் அருமை பெருமைகளைப் பலவாறாகக் கவிதைகளில் புனைந்து பாடினார். அது 'காந்திக் கவிதை' என்னும் பெயரில் நூலாக வெளிவந்தது.

இங்குப் பாடமாக வந்த பாடல் ஆறாம் பருவமான வருகைப் பருவத்தின் எட்டாவது செய்யுள். குழந்தையின் பதின்மூன்றாம் திங்களில் குழந்தையை அருகே வருமாறு அழைத்துப் பாடப் பெறுவது. இப்பாடல் பாற்கடலைக் கடைந்து தேவர் அமுதம் பெற்ற புராணக் கதையை நினைவிற் கொண்டு பாடப்பட்டது.

NOT TO BE REPUBLISHED @KTBS

அருஞ்சொற்பொருள் : பொறை - பொறுமை ; நாண்-கயிறு ; மல்லல் - பெருமை ; உய - உய்ய - வாழும்படி ; இறைமால் - கடவுளான திருமால் ; கத்தூரி - காந்தி அடிகளாரின் மனைவியான கஸ்தூரிபா அம்மையார்.

கருத்துரை : அமைதி என்னும் பெருங்கடலில் வாய்மை என்னும் தூணை நிறுத்திப் பெருமை பொருந்திய பொறுமையை மத்தாகக் கொண்டு அறம் என்னும் கயிறு பூட்டிக் கயிற்றின் இருபுறத்தையும் இந்து, முகமதியர் என்ற இருவகுப்பினரும் வன்மையாக இழுக்க, விட்டுக்கொடுத்ததன் பயனாகக் கிடைத்த பேரின்பம் (விடுதலை) என்கின்ற அரிய அமிழ்தத்தைத் தேவர்கள் வாழத் தேவாமிர்தத்தைக் கொடுத்த கடவுள் திருமாலைப் போல, எல்லா உலக உயிர்களும் நன்கு வாழும் பொருட்டு வழங்கிக் காந்தம் இரும்பினை ஈர்ப்பது போல் அன்பினால் அனைவரையும் இழுக்கின்ற காந்தியே வருவாயாக ! மனத்திற்கேற்ற மனையாளான கஸ்தூரிபாய் அன்னையின் கணவனே ! வருவாயாக.

## பயிற்சி

எதிர்ச்சொல் தருக : சத்யம் ; தருமம் ; இன்பம் ; வருக ; இசைந்த ; கணவன்.

செய்முறை : காந்தி அடிகளின் சிறப்புக்களைப் பதினைந்து வரிகளில் எழுதி ஆசிரியரிடம் காட்டுக.

© KTBS NOT TO BE REPUBLISHED

# 10. சுற்றுலா

(கடிதம் வரைதல்)

எண் 27, தாமோதர முதலியார் தெரு,
அல்சூர், பெங்களூரு

10-10-2010

அன்புள்ள நண்பன் முகிலனுக்கு,

நலம் நலமறிய வேண்டுகிறேன். நீ எழுதிய கடிதம் கிடைத்தது. ஆனால் என்னால் உடனடியாகக் கடிதம் எழுத முடியவில்லை. ஏனெனில் எங்களுடைய பள்ளியிலிருந்து ஐந்து, ஆறு, ஏழாம் வகுப்பு மாணவர்கள் எல்லோரும் கல்விச் சுற்றுலாவிற்காக சிரவண பெலகொளா, பேலூர், ஹளேபீடு முதலிய வரலாற்றுப் புகழ் வாய்ந்த இடங்களுக்குச் சென்றோம். அதனால் தான் கடிதம் எழுத தாமதமாயிற்று. இக் கடிதத்தின் மூலம் சுற்றுலா சென்று வந்த அனுபவத்தை உன்னுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

சுற்றுலாவிற்கான நாள், இடம், குறிப்பிட்டவுடன் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். குறிப்பிட்ட நாளில் பேருந்து 'பாம் பாம்' என்று ஒலித்துக் கொண்டு சென்றது. முதலில் சிரவண பெலகொளாவை நோக்கிப் புறப்பட்டோம். சிரவண பெலகொளாவிற்கு இரயில் வழி இல்லாததால் பேருந்தில்தான் செல்ல வேண்டும். பெங்களூரில் உள்ள விண்ணைத் தொடும் உயரமான கட்டிடங்கள் எல்லாம் வேகமாக மறைந்தன. பச்சைப் பசேல் என்று பயிர்கள் எல்லாம் செழிப்பாகக் காணப்பட்டன.

NOT TO BE REPUBLISHED ©KTBS

சிரவண பெல கொளா : இது கருநாடக மாநிலத்தில் ஹாசன் மாவட்டத்தில் உள்ளது. பெங்களூரிலிருந்து 160 கி.மீ. தூரமும் ஹாசனிலிருந்து 52 கி.மீ. தூரமும் உள்ளது. இங்குள்ள இந்திரகிரி மலையில் கோமடேசுவரர் சிலை உள்ளது. ஒரே கல்லில் செதுக்கப்பட்ட இச்சிலை உலகப் புகழ் பெற்றது. இதன் உயரம் 58 அடி. இது சமண சமயத்தினரின் முக்கியமான கோவிலாகும். ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமையானது. கலைத் திறனுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. முழு நிர்வாணமாக, சிலையாக இருப்பது பாகுபலி என்ற சமண அரசனாகும்.

சாமுண்டராயனுக்கு மற்றொரு பெயர் கோமுடா என்பதாகும். அவனால் வணங்கப்பட்ட பாகுபலிக்கு கோம டேசுவரர் என்ற பெயரும் உண்டு. சிராவண பரம்பரையானது, ஐந்தாயிரம் வருட வரலாற்றைக் கொண்ட சமண சமய துறவிகளைக் குறிக்கும். இப்பகுதியில் துறவிகள் மிகுதியாக இருந்ததால் சிரவண பெலகொளா என்ற பெயர் வந்தது. சமண முனிவர்கள் இருக்கும் பகுதியில் உள்ள வெள்ளைக்குளம் என்ற பொருளில் சிரவண பெலகொளா என்ற பெயர் இவ்விடத்திற்கு வந்தது. இதைப் பற்றிய கதை ஒன்றையும் எங்கள் ஆசிரியர் சொன்னார்.

சமணர்களின் 14 வது தலைமுறையில் வந்தவர் சாபிராஜன். அவர் மனைவி மருத தேவி. இவருக்குப் பிறந்த விருஷபநாதன் என்பவர் சமணர்களில் முதல் தீர்த்தங்கரராக மதிக்கப்படுபவர். அவருடைய மகன் பரதன். இந்தப்பரதனின் பெயராலேயே இந்தியா பரத கண்டம் என்று அழைக்கப் படுகின்றது. பரதன் முதல் பேரரசனாக இருந்தான் அவனுடைய மூன்றாவது தம்பிதான் பாகுபலி. பரதன் தன் சக்ராயுதத்தைப் பயன் படுத்தி ஆறு கண்டங்களையும் வெற்றி கொண்டான், ஆனால் அவனுக்கு பாகுபலி தலை வணங்க

NOT TO BE REPUBLISHED @KTBS

மறுத்து விட்டான். இதைத் தெரிந்து பரதன் தன் தம்பி மீது படையெடுத்தான். நூற்றுக் கணக்கானவர் போரில் மடிவதை பாகுபலி விரும்பவில்லை. 'தனித்துப் போரிட முடிவு செய்தான். இதைத் தொடர்ந்து திருட்டியுத்தம் (பார்வையாலேயே சண்டை போடுதல்) ஜலயுத்தம் (தண்ணீரில் சண்டை போடுதல்) மல்யுத்தம் போன்றவை நடந்தன. இறுதியில் பாகுபலி வெற்றி பெற்றான். அவன் வெற்றிக் களிப்பில் நின்ற போது ஆத்திரத்தில் போர் முறைகளுக்கு மாறாகத் தம்பி மீது சக்ராயுதத்தை ஏவினான் பரதன். ஆனால் அந்த ஆயுதம் வெற்றி பெற்ற வீரனை வெட்டாமல் அவனைச் சுற்றி வந்து துதிபாடியது. இதனால் பரதன் வெட்கித் தலை குனிந்தான். பாகுபலி வெற்றி பெற்றாலும் அண்ணனையே அரசாட்சி செய்யும்படிச் சொல்லி விட்டுத் தவம் செய்யக் காடு சென்றான். பல நாட்கள் நின்றபடியே தவம் செய்தான். தந்தை மற்றும் எல்லா தீர்த்தங்கரர்களுக்கும் முன்னதாக முக்தியடைந்தான் என்று ஆசிரியர் கதையைச் சொல்லி முடித்தார்.



பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மகாமஸ்தக அபிஷேகம் கோமடேசுவரர்க்கு நடைபெறுகிறது. சுருண்ட முடி, நீண்ட காதுகள், பரந்த நெற்றி, அகன்ற தோள்கள், நீண்ட கைகள் கொண்ட கம்பீரமான உருவம் கண்ணையும், கருத்தையும் கவர்கிறது. கருணை நிறைந்த கண்கள், கூரிய

©KTBS NOT TO BE REPUBLISHED

மூக்கு, அழகிய தடித்த உதடுகள் கொண்ட சாந்த முகம் பார்ப்பவர்கள் மனத்தை விட்டு அகலாது. 500 படிகள் ஏறிவந்த களைப்புக்கூட இதைப் பார்க்கும் பொழுது பறந்தோடி விடுகிறது.

இச்சிலை தாமரைப் பூவின்மீது நிற்பதுபோல் உள்ளது. பாதத்திலிருந்து முழங்கால் வரை எறும்புப் புற்று வளர்ந்து இருப்பதுபோல் உள்ளது. அந்தப் புற்றிலிருந்து மாதவிக்கொடிகள் இரு மருங்கிலும் வளர்ந்து கால், கைகளில் ஏறித் தோள்வரை படர்ந்துள்ளது போல மிகவும் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளது. அச்சிலையைக் கங்க மன்னன் இம்மடி இராச மல்லனின் அமைச்சரும் படைத்தளபதியுமான சாமுண்டராயர் என்பவர் அமைத்தார். இச்சிலையைச் செதுக்கிய சிற்பி அரிஷ்டநேமி என்பவராவார். பிறகு இங்கிருந்து பேலூருக்குச் சென்றோம்.

பேலூர் : இது ஹாசனிலிருந்து 40 கி.மீ. தூரத்தில் உள்ளது. இங்குள்ள சென்னகேசவா ஆலயம் மிகவும் புகழ் பெற்றது.

இக்கோயிலைக் கட்டியவர் போசள(ஹொய்சளர்) மன்னன் விஷ்ணுவர்த்தன். இக்கோவில் 1117 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. போசளர்கள் மன்னர்களின் பூர்வீகம் சிக்கமகளூரு மாவட்டத்தின் முடுகரே வட்டத்தில் உள்ள அங்கடி என்ற ஊராகும். இங்கு மேலேறிய புலியைச் சமண முனிவரின் கட்டளையின்படி சளன் என்ற ஒருவனே கடகத்தால் கொன்றதாக வரலாறு உள்ளது. பேலூரின் பல கோயில்களில் சளன் புலியுடன் போராடும் சின்னத்தைக் காணலாம். இது போசளரின் சின்னமாகும். ஹொய்சளர்கள் சமண மதத்தைப் பின்பற்றினர். சொசேனூரு வாசந்திகாதேவி இவர்களுடைய குலதெய்வம். விஷ்ணுவர்த்தன் முதலில் சமண மதத்தவனாயினும் ராமானுஜாச்சாரியாரின் தாக்கத்தால் வைணவ மதத்தைத் தழுவினான்.

©KTBS NOT TO BE REPUBLISHED



போசள மன்னர்களில் மிகவும் சிறந்தவன் விஷ்ணு வர்த்தன். இவனுக்கு மற்றொரு பெயர் பிட்டி தேவா. இவனுடைய பட்டத்து ராணி சாந்தலா தேவியும் பரத நாட்டியத்தில் சிறந்தவளாக இருந்தாள். மூல தேவாலயத்தை வலம்வந்தால் கம்பத்தில் பெண் சிற்பங்கள் காணப்படுகின்றன. இன்று அணியும் ஆபரணங்கள் எல்லாம் 900 ஆண்டுகளுக்கு முன்பே காணப்படுகின்றன. இக் கோயில் மாக்கல்லினால் கட்டப்பட்டது. இக்கற்கள் சுற்றுப் புறம் நூறுமைல் வரை காணப் படுவதில்லை. வெளிச்சுவரைச் சுற்றி இருக்கும் சிற்பங்களில் இராமாயணம். மகாபாரதக் கதைகள் பற்றிய சிற்பங்கள், பெண் உருவச் சிலைகள் ஆகியவற்றை ஒருமுறை பார்த்தால் மீண்டும் மீண்டும் பார்க்கத் தோன்றும். ‘‘நட்சத்திர வடிவத்திலுள்ள பீடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. ‘யானைகளின் வரிசை, சிங்கங்களின் வரிசை, பறவைகள், பிராணிகள், மனிதர்கள், தேவதைகளின் வரிசைகள் உள்ளன, ஒருயானை மற்றொரு யானையைப் பின்

©KTBS NOT TO BE REPUBLISHED

தொடர்வது போன்ற 650 யானைகளின் சிற்பங்கள் உள்ளன. இவையெல்லாம் கல்லில் செதுக்கப்பட்ட உயிர் ஓவியங்களாகக் காட்சி அளிக்கின்றன. ஒன்றைப் போன்று மற்றவை இல்லை. இக்கோயில் ஜக்கனாச்சாரி மேற்பார்வையில் கட்டப் பட்டுள்ளது. 42 கம்பங்கள் உள்ளன. இவற்றில் நரசிம்மக் கம்பம், மோகினிக்கம்பம் மிகவும் அழகானவை. நரசிம்மக் கம்பத்தில் இரணியனின் வயிற்றைக் கிழித்த நரம்பு கூடக் காணப்படுகிறது. பின்பு இங்கிருந்து ஹளேபீடுவிற்குச் சென்றோம்.



ஹளேபீடு : இது பேலூரிலிருந்து 16 கி.மீ. தூரத்தில் உள்ளது. இது முன்பு துவார சமுத்திரம் என்று அழைக்கப்பட்டது. இது ஹொய்சளர்களின் தலை நகரமாக இருந்தது இங்கு ஹொய்சளேஸ்வர தேவாலயம், கேதாரேஸ்வர தேவாலயம் உள்ளன. இது 1121 - இல் கட்டப்பட்டது. ஹொய்சளர்களின் கட்டட கலையில் பேலூர், ஹளேபீடு, சோமநாதபுரம் கலையின் சுவர்க்கம் எனப்படுகிறது. ஹொய்சளர்களின் கட்டடக் கலையில் மற்றொரு சிறப்பு காற்று புகும் ஜன்னல்களாகும். இக்காலத்தில் போசளர்களின் கட்டடக்கலை உச்சத்தை அடைந்தது. கோயிலில் உள்ள 280

NOT TO BE REPUBLISHED

சிற்பங்களில் 166 பெண்கள் 104 ஆண்கள். கேதாரேஷ்வரர் ஆலயத்தில் செதுக்கிய வாத்து, முதலை, மலர்கள் மிகவும் அழகாக உள்ளன. போசளர்கள் கோயில் மிகவும் சிறப்பான கலை உணர்வுடன் கட்டப்பட்டுள்ளது. இங்கும் சிலாபாலிகா எனப்படும் இளம் பெண்களின் சிலைகள் காணப்படுகின்றன. பேலூரின் சென்னகேஸ்வரர் கோயிலிலும் இத்தகைய சிலைகள் மிகவும் பொலிவுடன் காணப் படுகின்றன. இச் சிலைகளை மதனிகா என்றும் அழைப்பர்.



இவ்வாறு எங்கள் தமிழாசிரியர் விளக்கம் கொடுத்தார். இவற்றைக் கேட்டவுடன் நாங்கள் புராணக் காலத்திற்கே போய் விட்டோம். எங்களுடைய பேருந்து முன்னோக்கிச் சென்றாலும் எங்களுடைய எண்ணமெல்லாம் பின்னோக்கிச் சென்றது. ஊரை அடைந்ததும் எங்கள் தாய், தந்தை சகோதரரிடம் பார்த்ததை எல்லாம் சொன்னோம். ஆனாலும் கடிதம் மூலம் உனக்கு எழுதுவதில் மிகவும் மிகழ்ச்சி அடைகிறேன். நான் சென்ற இடமெல்லாம் நீயும் சென்று' மகிழ்ச்சியடைய வேண்டும். இவற்றைப் பற்றி எவ்வளவு

NOT TO BE REPUBLISHED

படித்தாலும் நேரில் கண்டு களிக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சியே தனி. அதனை அனுபவித்து உணர வேண்டும்.

இங்ஙனம்
உன் அன்புள்ள
க. எழிலன்

பெறுநர்

ந. முகிலன்,
த/பெ. நன்னன்,
3, 9வது குறுக்குத் தெரு,
நேதாஜிநகர்,
துங்கத்திரை அணை - 583 225

@KTBS NOT TO BE REPUBLISHED

**I.** அருஞ்சொற்பொருள் :

துறவி - சந்நியாசி
களிப்பு - உவகை
கடகம் - வாள்
தமையன் - மூத்த சகோதரன்
முக்தி - மோட்சம்

## பயிற்சி

**II.** சேர்த்தெழுதுக :

1) தாமதம் + ஆயிற்று = ..............
2) உலகம் + ஆனது = ..............
3) பரம்பரை + ஆனது = ..............
4) சுற்றி + சுற்றி = ..............
5) மகிழ்ச்சி + அடைந்தோம் = ..............
6) சக்கரம் + ஆயுதம் = ..............

**III.** **பிரித்து எழுதுக :**

1) அரசாட்சி = ............. + .............

2) தாமரைப் பூ = ............. + .............

3) மேற்பார்வை = ............. + .............

4) பழமையானது = ............. + .............

**IV.** **எதிர்ச் சொல் தருக :**

1) முடியாது × ............

2) மனைவி × ............

3) வீரன் × ............

4) கோபம் × ............

5) முன்னோக்கி × ............

6) மகிழ்ச்சி × ............

**V.** **சொந்தத் தொடரில் அமைக்க :**

1) பச்சைப் பசேல்

2) உலகப்புகழ்

3) சக்ராயுதம்

4) மகாமஸ்தக அபிஷேகம்

5) தாமரைப்பூ

**VI.** **பொருத்துக :**

| | | |
|---|---|---|
| 1) | சாமுண்டராயன் | சாந்தலா தேவி |
| 2) | கோமடேஸ்வரர் | துவார சமுத்திரம் |
| 3) | பேலூர் | வெள்ளைக் குளம் |
| 4) | நாட்டியராணி | கோமுடா |

NOT TO BE REPUBLISHED @KTBS

5) ஹளேபீடு      அரிஷ்டநேமி

6) சிரவணபௌகுளா      சென்னகேசவா ஆலயம்

**VII.** ஓரிரு தொடர்களில் விடைதருக :

1) சிரவணபெலகொளா எங்குள்ளது ?

2) கோமடேஸ்வரர் சிலை எங்குள்ளது ?

3) பாகுபலி யார் ?

4) சிராவண பெலகொளா என்பதன் பொருள்யாது ?

5) பேலூரில் உள்ள புகழ்பெற்ற ஆலயம் எது ?

6) சமண முனிவர்களின் கட்டளை யாது ?

7) விஷ்ணு வர்த்தனின் பட்டத்து ராணி யார் ?

8) பேலூரின் கோயில்கள் யாருடைய மேற்பார்வையில் கட்டப் பட்டன ?

9) துவார சமுத்திரத்தின் இன்றைய பெயர் யாது ?

10) சிலா பாலிகா என்றால் என்ன ?

**VIII.** நான்கு அல்லது ஐந்து தொடர்களில் எழுதுக :

1) கோமடேஸ்வரர் சிலையைப் பற்றி எழுதுக.

2) பரதன் பாகுபலி மீது சக்ராயுதத்தை ஏன் ஏவினான் ?

3) விஷ்ணுவர்த்தன் கட்டிய கோயில்கள் யாவை ?

4) பேலூரின் சிற்பங்களைப் பற்றி எழுதுக.

5) போசளர்கள்களின் கட்டடக்கலை உச்சத்தை அடைந்தது எப்பொழுது ?

**IX.** கோடிட்ட இடங்களைத்தக்க சொற்களால் நிரப்புக :

1) சாமுண்டராயனுக்கு மற்றொரு பெயர் ................

©KTBS NOT TO BE REPUBLISHED

2) கோமடேஸ்வரர் சிலை .............. நிற்பது போல் உள்ளது.

3) கோமடேஸ்வரர் சிலையைச் செதுக்கிய சிற்பி ........

4) ............... தாக்கத்தால் வைணவ மதத்தைப் பின் பற்றினான்.

5) போசளர்களின் தலை நகரம் ...............

6) விஷ்ணுவர்த்தனின் மற்றொரு பெயர் ..............

7) சென்னகேசவா ஆலயத்தை அமைத்தவர் .............

**X.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

1) பாகுபலி

அ) கோமுடா ஆ) கோமடேஸ்வரர்

இ) சான்ராஜன் ஈ) பரதன்

2) மகா மஸ்தக அபிஷேகம் நடைபெறுவது எத்தனை ஆண்டுக் கொருமுறை ?

அ) 18 ஆண்டு ஆ) 6 ஆண்டு

இ) 9 ஆண்டு ஈ) 12 ஆண்டு

3) சென்ன கேசவ ஆலயத்தைக் கட்டியவர்

1) சளன் 2) ராமானுஜாச்சாரியர்

3) விஷ்ணுவர்த்தன் 4) ஜக்கனாச்சாரியார்

4) ஹொய்சளேஸ்வரர் தேவாலயம் இருக்குமிடம்.

1) ஹளேபீடு 2) பேலூர்

3) சிரவண பெலகொளா 4) ஹம்பி

©KTBS NOT TO BE REPUBLISHED

## III. இலக்கணம்

### 3. திசைச்சொல்

பல திசைகளில் வழங்குகின்ற பலமொழிச் சொற்களிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்கள் ''திசைச்சொற்கள்'' எனப்படும்.

(எ-டு) மோட்டார், ரயில் - ஆங்கிலம்

ஜன்னல், அலமாரி - போர்த்துகீசியம்

சலாம், சுமார் - பாரசீகம்

அசல், இனாம் - இந்துஸ்தானி

ஆசாமி, - அரபி

சிக்குதல் - கன்னடம்

அச்சன் - மலையாளம்

NOT TO BE REPUBLISHED
©KTBS

### 4. வடசொல்

வடமொழியிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொல் வடசொல் எனப்படும். (வடமொழி - சமஸ்கிருதம்)

வடசொல் தற்சமம், தற்பவம் என இருவகைப்படும்.

**தற்சமம் :**

இரண்டு மொழிக்கும் பொதுவான எழுத்துக்களால் ஆனவை தற்சமம் எனப்படும்.

(எ-டு) காரணம், கமலம், குங்குமம்.

**தற்பவம் :**

வடமொழி சிறப்பெழுத்துக்கள் தமிழில் ஏற்றவாறு திரிந்து வழங்குவது தற்பவம் எனப்படும்.

(எ-டு) விசேஷ - விசேடம்; புத்ர - புத்திரன்;

வருஷம் - வருடம்; ஹரி - அரி.

**வினாக்கள்**

1. திசைச்சொல் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.
2. வடசொல் என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும் ?

# 11. ஆசாரக் கோவை

C9Q9H1

## ஆசிரியரிடம் நடந்துகொள்ளும் முறைமை

1. நின்றக்கால் நிற்க அடக்கத்தால் என்றும் ;
இருந்தக்கால் ஏவாமை ஏகார் ; பெருந்தக்கார்
சொல்லின் செவிகொடுத்துக் கேட்டீக ; மீட்டும்
வினாவற்க சொல்லொழிந்தக் கால்.

## எறும்பு முதலியவைபோல் செயல் செய்தல்

2. நந்தெறும்பு, தூக்கணம் புள், காக்கை என்றிவை போல்
தங்கருமம் நல்ல கடைப்பிடித்துத் - தம்கருமம்
அப்பெற்றி யாக முயல்பவர்க்கு ஆசாரம்
எப்பெற்றி யானும் படும்.

- பெருவாயில் முள்ளியார்

**ஆசிரியர் குறிப்பு :**

இந்நூலின் ஆசிரியர் பெருவாயில் முள்ளியார். இவரது ஊர் வண்கயத்தூர் என்பர்.

**நூற்குறிப்பு :**

ஆசாரக் கோவை பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. ஆசாரம் - ஒழுக்கம். கோவை - தொகுதி. பல்வேறு மாந்தர் ஒழுக்கங்களை ஒருசேரத் தொகுத்துக் கோத்த நூல் என்று பொருள்படும். இந்நூல் எழுந்த காலம் சங்க மருவிய

@KTBS NOT TO BE REPUBLISHED

காலமாகும். இந்நூலில் தற்சிறப்புப் பாயிரப் பாடல் ஒன்றும் நூறு வெண்பாக்களும் உள்ளன. இந்நூலில் கூறப்படும் ஒழுக்கங்கள் யாவும் நாள்தோறும் யாவரும் நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டுவன.

*அருஞ்சொற்பொருள் :*

1. அமர்ந்தக்கால் - உட்கார்ந்து பாடம் சொல்லும் பொழுது ; ஏவாமை - ஏவாமல், கட்டளையிடாமல் ; ஏகார் போகமாட்டார்கள் ; தக்கார் - தகுதி படைத்த ஆசிரியர் ; மீட்டும்-மீண்டும்.

2. நந்து - நத்தை, சங்கு ; பெற்றி - தன்மை ; முயல்பவர் - முயற்சி செய்பவர் ; ஆசாரம் - ஒழுக்கம் ; படும் - உண்டாகும்.

*கருத்துரை :*

1. ஆசிரியர் நின்றிருக்கும் பொழுது மாணவன் அடக்கத் துடன் நிற்க வேண்டும் ; ஆசிரியர் அமர்ந்திருந்து பாடம் சொல்கையில், அவர் கட்டளையின்றி மாணவன் வெளியில் செல்லக்கூடாது ; பெருந்தகுதி படைத்த ஆசிரியர் பாடம் சொல்கையில் கருத்துடன் கேட்க வேண்டும் ; அவர் சொல்வதை நிறுத்திவிட்டபிறகு கேள்விகள் எவையும் கேட்ட லாகாது.

2. நத்தை, எறும்பு, தூக்கணாங் குருவி, காக்கை என்ற உயிரிகள் போலத் தமக்குரிய செயல்களை நன்கு மேற்கொண்டு அச்செயல்கள் வெற்றிபெறும் வண்ணம் முயல்பவர்க்கு நல்லொழுக்கம் தானே வந்து அவரைச் சாரும்.

## பயிற்சி

*சேர்த்து எழுதுக :*

இருந்த + கால் ; சொல் + ஒழிந்தக்கால் ; நந்து + எறும்பு; தம் + கருமம்.

*பிரித்தெழுதுக :* பெருந்தக்கார் ; கேட்டீக ; என்றிவை ; அப்பெற்றி.

NOT TO BE REPUBLISHED ©KTBS

வினாக்களுக்கு விடைதருக :

1. ஆசிரியர் அமர்ந்து பாடம் சொல்கையில் மாணவன் என்ன செய்யவேண்டும் ?

2. ஆசிரியர் சொல்வதை நிறுத்தியவழி என்னசெய்ய வேண்டும் ?

3. எறும்பு கடைப்பிடிக்கும் நல்லொழுக்கம் என்ன ?

4. காக்கையின் நற்பண்பு ஒன்று கூறுக.

5. மேற்கொண்ட செயல்களில் நன்கு உழைப்பவர்களுக்கு உண்டாகும் பயன் யாது ?

செய்முறை :

1. மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நல்லொழுக்கங்கள் சிலவற்றைத் தொகுக்கவும்.

2. நாய், சந்தனக்கட்டை, மெழுகுவர்த்தி, வாழை - இவற்றிடம் உள்ள நற்பண்புகளைக் கண்டறிக.

@KTBS
NOT TO BE REPUBLISHED